Registered as a Newspaper    பக்கங்கள் 08    விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM    மக்கள் தினசரி    Peoples Daily

நாதம் 04    திருவள்ளுவர் ஆண்டு 2024    கார்த்திகை 28    (13-12-93)    திங்கட்கிழமை    ஓசை 298

## வெற்றிச்சுடரை ஏந்தி இளைஞர், யுவதிகள் அணிவகுப்பு

பூநகரி முகாம் தகர்ப்பின் வெற்றியைக் குறிக்கும் முகமாக நடாத்தப்பட்ட வெற்றிவிழாவின் இரண்டாம் நாள் நிகழ்வில் இளைஞர்களும் யுவதிகளும் இணைந்து வெற்றிதீபம் ஏந்தி வீதிவழியே அணிவகுத்து சென்றனர். நேற்றுமாலை ஆறுமணியளவில் நல்லூர் பாரதியார் சிலை முன்பாக வடமாகாண ஒப்பந்தகாரர் சங்க செயலாளர் வெற்றிதீபத்தை ஏற்றி அணிவகுப்பை ஆரம்பித்துவைத்தார். வெள்ளை சீருடை அணிந்த இளைஞர் ஒருவர் மஞ்சள், சிவப்புநிறக் கொடியை ஏந்திசெல்ல இளைஞர்களும் யுவதிகளுமாக எட்டு அணியினர் கைகளிலே வெற்றிதீபங்களை ஏந்தியவாறு அணிவகுத்து கந்தர்மடம் சந்தியை (7ஆம் பக்கம் பார்க்க)

## பூநகரி வெற்றியை ஈட்டித்தந்த தலைவருக்கு கிரீடமும், கேடயமும்

பூநகரி கூட்டுத்தளம் மீதான 'ஒப்ரேசன் தவளை' தாக்குதலினை சிறப்புற திட்டமிட்டு வழிநடத்தி வெற்றியை ஈட்டித் தந்தமைக்காக தேசியத் தலைவர் வே. பிரபாகரனுக்கு வெற்றிக் கேடயமும், கிரீடமும் பரிசளிக்கப்பட்டது. நேற்று மாலை யாழ். பல்கலைக் கழக மைதானத்தில் நடைபெற்ற வெற்றி விழா நிகழ்வின் போதே இவை பரிசளிக்கப்பட்டன. மக்களின் பலத்த கரகோஷத்தின் மத்தியில் சங்கானை பலநோக்கு கூட்டுறவுச் சங்கம், பண்டத்தரிப்பு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம், சங்கானை தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கம் ஆகியவை இணைந்து வெற்றிக் கிரீடத்தையும், சங்கானை பிரதேச வர்த்தகர் சங்கம் வெற்றிக் கேடயத்தையும் வழங்கின. இவற்றை மூத்த தளபதி திரு. பொட்டுஅம்மான் பெற்றுக் கொண்டார்.





பூநகரி முகாம் தகர்ப்பு வெற்றிநாளின் இரண்டாம் நாள் நிகழ்வுகளின் ஓர் அங்கமாக நேற்று நடைபெற்ற மகளிர் படையணியினரின் அணிவகுப்பை படத்தில் காணலாம்.

# புலிகளின் இராணுவ வலிமை உலகத் தமிழ்மக்களின் கவசம்!

## பருத்தித்துறையில் இன்று வெற்றிநாள் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

பூநகரி கூட்டுத்தளம் தகர்ப்பு வெற்றி நாட்களின் இறுதிநாள் பொதுக்கூட்டம் இன்று பருத்தித்துறை பழைய பஸ்நிலைய மைதானத்தில் பிற்பகல் 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

இக் கூட்டம் ஆரம்பமாவதற்கு முன்பதாக அணிவகுப்பு நிகழ்வும் நடைபெறவுள்ளது.

## பூநகரி வெற்றி விழாவில் பொட்டு அம்மான்

(யாழ்ப்பாணம்)

"இன்று தமிழினத்தின் ஒட்டுமொத்தப் பாதுகாப்பு என்பது அதன் இராணுவ

## மாவீரர்களின் பெற்றோர் ஈகைச்சுடர் ஏற்றினர்

# புலிகளின் இராணுவ வலிமை

# உலகத் தமிழ் மக்களின் கவசம்!

### வெற்றிநாள் கூட்டம்

(யாழ்ப்பாணம்)
பூநகரி கூட்டுத்தளம் தகர்ப்பு வெற்றி நாட்களின் இறுதிநாள் பொதுக்கூட்டம் இன்று பருத்தித்துறை பழைய பஸ்நிலைய மைதானத்தில் பிற்பகல் 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

இக் கூட்டம் ஆரம்பமாவதற்கு முன்பதாக அணிவகுப்பு நிகழ்வும் நடைபெறவுள்ளது.

## பூநகரி வெற்றி விழாவில் பொட்டு அம்மான்

(யாழ்ப்பாணம்)

**"இன்று தமிழினத்தின் ஒட்டுமொத்தப் பாதுகாப்பு என்பது அதன் இராணுவ வலிமையிலேயே தங்கியுள்ளது. எமது இராணுவ வலிமையை அதிகரிப்போமாக இருந்தால், நாம் பாதுகாப்பாக இருப்போம் தமிழீழத்தில் தமிழன் வீரத்துடன் போராடுகின்றான் என்ற செய்தி உலகெங்கினும் உள்ள தமிழர்களுக்கு ஒரு பாதுகாப்பு கவசமாக எந்தக் காலத்திலும் விளங்கும் என்ற உண்மையை நீங்கள் ஒவ்வொருவரும் உங்கள் நெஞ்சங்களில் நிறுத்த வேண்டும்."**

இவ்வாறு யாழ் பல்கலைக் கழக மைதானத்தில் நேற்று நடைபெற்ற பூநகரி வெற்றி விழாபொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரைநிகழ்த்திய விடுதலைப்புலிகளின் மூத்த தளபதி பொட்டு அம்மான் தெரிவித்தார்.

இவ் விழாவில் அவர் தொடர்ந்து பேசும்போது; இன்று புலிகளின் இராணுவ ரீதியான வளர்ச்சி என்பது ஒட்டுமொத்த தமிழ் இனத்தின் பாதுகாப்பு வளர்ச்சியின் ஒரு புதிய பரிணாமம் ஆகும். இன்று எமது தலைவர் கட்டி எழுப்பியிருப்பது என்னவென்றால் எமது இனம் தன்னிலேயேதங்கி நிற்கக்கூடிய ஒரு வீரம்மிக்க இனமாக உருவாக்கி உள்ளமை தான்.


பூநகரிச் சமரின் வெற்றி நாளான இனறு நாம் பூநகரிச் சமரின் வெற்றிக்காக தம்மை ஈய்ந்த எமது 458 போராளிகளையும் இந்த வெற்றியின் மகுடத்திற்காக அந்த வெற்றியின் மாளிகையைக்கட்டி எழுப்புவதற்காக அந்த மாளிகையின் அத்திவாரங்களாக அந்த சண்டையில் நீண்ட நாட்களுக்குமுன்னரே தம்மை அந்த அத்திவாரத்தில் அமிழ்த்தி இந்த வெற்றிக்கு முதற்படி இட்ட வேவு வீரர்களின் நினைவாகவும் நாங்கள் எண்ணங்களை செலுத்தி அவர்களுக்கு வீர அஞ்சலியைச் செலுத்தி இந்த வெற்றியை நினைவு கொள்வோம்.

### ஒருவருடத்திற்கு முன் தொடங்கிய சண்டை

இந்த வெற்றி விழாவிலே நாம் கருத்துக்களை கூறும்படி கேடடபோது பலர் என்னைக் கேட்டார்கள் இந்தச் சண்டை எப்போ தொடங்கியது என்று

இந்தக் கேள்விக்கு எதிரிகள்சொல்கிறார்கள் சண்டை 11ஆம்திகதி அதிகாலை 1-45க்கு தொடங்கியதாக. சிலர் சொல்கிறார்கள் இந்தச் சண்டை 10 ஆம் திகதி மாலையே தொடங்கிவிட்டதாக. ஆனால் என்னைக் கேட்டால் நான் சொல்வேன் எமது அனைத்துப் போராளிகளுக்கும் இந்தச் சண்டை நான்கு மாதங்களுக்கு முன்னரே தொடங்கி விட்டது. எமது வேவு அணியினருக்கும் எமது தலைவருக்கும் இந்தச் சண்டை ஒரு வருடத்திற்கு முன்னர் தொடங்கிவிட்டது. இன்னும் சொல்லப்போனால் எமது தலைவருக்கு இந்தச் சண்டை நாம் ஆனையிறவில் வெல்லமுடியாமல் திரும்பி வந்தபோதே தொடங்கிவிட்டது நாம் எமது ஒவ்வொரு அனுபவங்களையும் எமது படிப்பினையாக எடுத்துக் கொண்டு எமது ஒவ்வொரு தவறுகளிலிருந்தும் நாம்

(7ஆம் பக்கம் பார்க்க)



யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் இடம்பெற்ற வெற்றிநாள் பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்ட மக்களின் ஒரு பகுதியினரை படத்தில் காணலாம்.

## வடமராட்சியில் ஊர்தி பவனி

(யாழ்ப்பாணம்)

பூநகரியில் நடைபெற்ற "ஒப்ரேசன் தவளை" நடவடிக்கையின் வெற்றி விழாவை முன்னிட்டு இன்று வடமராட்சியில் ஊர்திபவனி நடைபெறவுள்ளது பூநகரிக்

(7ஆம் பக்கம் பார்க்க)

## வானில்விடப்பட்ட புகைக் கூண்டுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் நேற்று நடைபெற்ற பூநகரி சிறிலங்கா படைமுகாம் தகர்ப்பின் வெற்றிவிழாவின் இரண்டாம் நாள் விழாவின் இறுதியில் சுமார் ஆறிற்கும் மேற்பட்ட புகைக்கூண்டுகள் வானில் விடப்பட்டன இவை யாழ் நகரைநோக்கி ஆடி அசைந்து சென்றுகொண்டிருந்ததை வெகுதொலைவிலிருந்த மக்களும் பார்வையிட்டுக்கொண்டிருந்தனர்.

## மாவீரர்களின் பெற்றோர் ஈகைச்சுடர் ஏற்றினர்

### பெருமளவில் மக்கள் அஞ்சலி

(நல்லூர்)

தமிழீழ விடுதலைப் புலிகள் பூநகரி கூட்டுப்படைத் தளம் மீது மேற்கொண்ட தவளைத்தாக்குதல் நடவடிக்கையின் போது வீரச்சாவை தழுவிக்கொண்ட 458மாவீரர்களின் படங்களும் யாழ். பல்கலைக்கழகத்தின் மைதானத்தில் இதற்கென அமைக்கப்பட்டுள்ள விசேட பந்தலில் வைக்கப்பட்டுள்ளது.

இதனை தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன் தியாகம் நேற்று முப 10. 30 மணியளவில் திறந்து வைத்தார். மாவீரர்களின் பெற்றோர்கள் மாவீரர்களுக்கு ஈகைச் சுடரை ஏற்றி வைத்தார்கள். இதனைத் தொடர்ந்து பெரும் தொகையான மக்கள் இம் மாவீரர்களுக்கு தமது அஞ்சலியைச் செலுத்தி வருகிறார்கள்.

மாவீரர்களின் படங்கள் வைக்கப்பட்டுள்ள பந்தலின் முற்பகுதியில் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் முக்கிய நிகழ்ச்சிகளைக் குறிக்கும் படங்கள் வைக்கப்பட்டிருந்தன. 1956ஆம் ஆண்டு எஸ் டபிள்யு. ஆர். டி பண்டாரநாயக்காவினால் கொண்டு வரப்பட்ட தனிச்சிங்கள மசோதா சட்ட மூலம், பண்டா - செல்வா ஒப்பந்தத்தை செயற்படுத்தாமல்

(7ஆம் பக்கம் பார்க்க)

## பாண்ட் இசை அணிநடையுடன் ஆரம்பித்த 2ஆம் நாள் வெற்றிவிழா!

(நமது நிருபர்)

பூநகரியில் அமைந்திருந்த சிறிலங்காவின் நாகதேவன் துறை கடற்படைத்தளம் மற்றும் பூநகரி இராணுவமுகாம் மீதான 'ஒப்ரேசன தவளை' தாக்குதலின் வெற்றியை குறிக்கும் முகமாக நடாத்தப்பட்ட வெற்றிநாள் விழாவின் இரண்டாம் நாள் நிகழ்வுகள் வலிகாமம் கோட்டத்தில் யாழ். பல்கலைக்கழக மைதானத்தில்நேற்று நடைபெற்றன.

யாழ் இலுப்பையடிச் சந்தியிலிருந்து பாண்ட் இசை முழங்க மகளிர் படையணி அணி வகுத்துச் செல்ல கடற்புலிகள் அணிவகுப்பு தொடர விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பினரின் பாண்ட் குழு ஆகியன பலாலி வீதியூடாக அணிவகுத்துச் சென்று பல்கலைக்கழக மைதானத்தை வந்தடைந்தன

அவ்வேளை பல்லாயிரக் கணக்கான மக்கள் வீதிகளில் இரு மருங்கிலும் நின்று அணிவகுப்பை பார்வையிட்ட வண்ணமிருந்தனர். அப்போது அங்கு குழுமிநின்ற மக்களுக்கு கற்கண்டு போன்ற இனிப்புப் பொருள்கள் வழங்கப்பட்டன

பின்னர் ஆயிரக் கணக்கான மக்கள் சூழ்ந்து நிற்க விடுதலைப்புலிகள் மகளிர் படையணியினரதும் தொடர்ந்து கடற்புலிகளினது காட்சிஅணி

(7ஆம் பக்கம் பார்க்க)

## இன்று நாம் போராடாவிட்டால் எலும்புக்கூடுதான் சந்ததிக்கு மிஞ்சும்

### வெற்றி விழாவில் விசேட தளபதி செல்வராசா

(யாழ்ப்பாணம்)

"எமது ஆயுதக் களஞ்சியத்தில் ஆயுதங்கள் காத்துக் கிடக்கின்றன அந்த ஆயுதங்களை ஏந்தி எதிரிக்கு எதிராக நாம் அனைவரும் போராட வேண்டும் இல்லையேல் எமது எலும்புக் கூடுகளைத்தான் எதிர்கால சந்ததி தேடிக்கொண்டிருக்க வேண்டிய நிலை ஏற்படும்" இவ்வாறு யாழ். பல்கலைக்கழகத்தில் நேற்று மாலை நடைபெற்ற பூநகரித் தளம் தகர்ப்பு வெற்றி விழாப் பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய யாழ். மாவட்ட விசேட தளபதி திரு. செல்வராசா தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில் எமது ஆயுதங்களையும் எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஆயுதங்களையும் எமது போராளிகள் தமது தோள்களில் சுமந்தே அவர்களது தோட்பட்டைகளில் காயம் ஏற்பட்டுள்ளது. இவ்வாறு எமது தோட்பட்டைகள் நோக, கைகள் சோர, கால்கள் சோர ஆயுதங்களைச் சுமந்தோம். இதெல்லாம் எதற்காக? நாம் இவ்வளவு ஆயுதங்களையும் கைப்பற்றி விட்டோம் என்று பத்திரிகையில் அறிக்கை விடுவதற்காக

(7ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### புலமைப் பரிசில் வகுப்பு

1994 கல்வியாண்டு(ஆண்டு 5) புதியவகுப்புகள் 14-12-93 செவ்வாய் காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும். வாரத்தில் ஒவ்வொரு ஞாயிறும் மாதிரிப் பரீட்சை நடாத்தப்படும். அனுமதிகளை உடன் பெற்றுக்கொள்ளவும். நாவலர் கல்விக் கழகம், நாவலர் வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம், (சி-8115)

### துளிர்

தமிழ் நாடு, புதுவை அறிவியல் இயக்கம் இணைந்து வெளியிடும் சிறுவர் அறிவியல் இதழ். கிடைக்கும் இடம் வசந்தம் புத்தக நிலையம் 405, அருச்சுனா வீதி யாழ்ப்பாணம். (6861)

### "மார்க்கோசின் பூச்சிகொல்லி"

மார்க்கோசின் செய்திறன் கொண்ட சிறந்த பூச்சிகொல்லி, பயிரில் துரிதமாகப் பரவும் தன்மை நிறைந்தது. பூச்சிபுழுக்களின்விருத்தியைத் தடுக்கிறது. பூச்சிகள் எதிர்ப்புச் சக்தி-விருத்திசெய்வதைக் கட்டுப்படுத்துகிறது யாழ். மின்சார வீதி விவசாய இரசாயனம் விற்பனையாளர்கள் லங்கெம் லிமிட்டெட்டிலும் விற்பனையாகிறது. (சி-8097)

### பெற்றுக் கொள்ளவும்

ஸ்ரார் வாச்வேக்ஸ் ஸ்தாபனத்தில் திருத்தம் செய்ய கொடுக்கப்பட்ட உங்கள் மணிக்கூடுகளை எனது இல்லத்தில் பெற்றுக் கொள்ளவும் க. பரமேஸ்வரன், 399 கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம் (6880)

---

## தேவை

கீழ்க்காணும் வெற்றிடங்களுக்கு அனுபவம் மிக்கவர்கள் தேவை.

### I தையலாளர்

அனுபவமிக்க பெண் தையலாளர் தேவை. நியாய பூர்வமான சம்பளம் வழங்கப்படும்.
விண்ணப்ப முடிவுத்திகதி:- 19 12.1993

### II பராமரிப்பாளர்கள்

3-12 வயது வரையுள்ள பிள்ளைகளைப் பராமரிக்க பராமரிப்பாளர்கள் தேவை உரிய வேதனம் வழங்கப்படும்.

வயதெல்லை:- 25-45 வயதிற்குட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.

கல்வியறிவு:- க.பொ த (சாதா/தரம்) சித்தியெய்தியிருத்தல் வேண்டும்.

விண்ணப்பமுடிவுத்திகதி:- 21-12-1993

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:-
விளம்பர இல. 300
மே/பா, ஈழநாதம்.

(6875)

---

## ஒப்ரேசன் தவளை
## பூநகரி கூட்டுப்படை தளத் தகர்ப்பின்
# வெற்றி நாள்

தமிழுக்காய் புலியாகி
தமிழ் மண்ணுக்கே வித்தாகி
மாவீரப் புகழ் ஏந்தி
எம் நெஞ்சங்களில் நிறைந்திட்ட
மாவீரர்களை நினைவு கூருகின்றோம்

உரும்பராய், ஊரெழு
வர்த்தகர்கள்.

(6879)

---

## ஓராண்டு நினைவுநாள்



### வீரவேங்கை கதிரவன்
(கற்கண்டு விஜயலக்குணன்)

தாயின் மடியில் 4-9-197[illegible] | தாயக மண்ணில் 24-11-1992

கதிரவன் நீ அன்றே
காலையில் மலர்வாயடா
கதிரவனாம் உனைக்கண்டு
களிப்புற்ற ஈழமண்ணும்
உன் பாதம் எங்கே என்று
ஈழ மண்ணும் ஏங்குதடா
கதிரவனின் ஒளி இன்றி
உன் குருதி காயவில்லை
தம்பி உன் பிரிவு கண்டு
ஏங்குதடா எங்கள் உள்ளம்.

உன் ஆத்மா சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம். இவருடன் வீரச்சாவடைந்த ஏனைய மாவீரர்க்கும் அஞ்சலி செலுத்துகின்றோம்.

இவரின் ஓராண்டு நினைவஞ்சலியில் ஏனைய போராளிகளையும், நண்பர்களையும் கலந்து கொள்ளும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

விழிசுட்டி
சங்கானை

உன்பிரிவால் வாடும்,
குடும்பத்தினர்.

(6878)

---

## நினைவு கூருகின்றோம்...
### 1993-12-13

1984ஆம் ஆண்டு இதே தினத்தில் மன்னார், முருங்கன் பகுதியில் சிறிலங்கா படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட மெதடிஸ்த திருச்சபைப் பாதிரியார் அவரது வாகனச்சாரதி உட்பட 03 தமிழர்கள்.

1986ஆம் ஆண்டு மட்டு - கஞ்சிகுடிச்சாறுப் பகுதியில் தேசவிரோதிகளால் கொலை செய்யப்பட்டு எமைப்பிரிந்த-

**விஜயன்** (தம்பிராசா முத்துலிங்கம்- விநாயகபுரம்- திருக்கோயில் - அம்பாறை)

மன்னார் - பெரியமடுப் பகுதியில் தேசவிரோதிகளின் முகாம் மீது மேற்கொள்ளப்பட்ட முற்றுகையின் போது வீரச்சாவெய்திய-

**2-ம் லெப். சிறி** (ஆரோக்கியம் ஜோன் சில்வா- நானாட்டான் - மன்னார்)

1988ஆம் ஆண்டு கிளாலிப் பகுதியில் இந்தியப் படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**லெப். ஜோதிரவி** (சண்முகம் வேல்ராஜ்- அல்லிப் பளை - பளை)

அம்பாறை - பொத்துவில், களுவாங்கிரைப் பகுதியில் இந்தியப்படையினரின் சுற்றிவளைப்பின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

**சந்திரன்** (- - -)

1991ஆம் ஆண்டு மன்னார் - அரிப்புப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரின் மிதிவெடியில் சிக்கிப் பலியான 02 குழந்தைகளின் தந்தையான தமிழ்ப் பொதுமகன்.

மட்டு - காங்கேயன் ஓடைத்தடை முகாம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப்பொதுமகன்.

மணலாறு, அளம்பில் பகுதியில் மார்புநோயினால் மரணமான எமது ஆதரவாளர்-

**திருமதி சிவக்கொழுந்து ஞானமுத்து** (அளம்பில்-மணலாறு)

1992ஆம் ஆண்டு திருமலை, சேனையூர், கிரவல்குழி பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலில் கொல்லப்பட்ட 02 தமிழ்ப் பொதுமக்கள்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.
**தமிழீழ விடுதலைப் புலிகள்.**

(சி-8108)

---

# ஒப்ரேசன் தவளை
# பூநகரி - நாகதேவன் துறை
## இராணுவ கூட்டுப் படைத் தளம் தகர்ப்பு

பெற்றுக் கொள்ளவும்

ஸ்ரார் வாச் வேக்ஸ் ஸ்தாபனத்தில் திருத்தம் செய்ய கொடுக்கப்பட்ட உங்கள் பணிக்கூடுகளை எனது இல்லத்தில் பெற்றுக் கொள்ளவும்
க. பரமேஸ்வரன், 399 கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்
(6880)

எம் நெஞ்சங்களில் நிறைந்திட்ட
மாவீரர்களை நினைவு கூருகின்றோம்

உரும்பராய், ஊரெழு
வர்த்தகர்கள்.

(6879)

இவரின் ஓராண்டு நினைவஞ்சலியில் ஏனைய போராளிகளையும், நண்பர்களையும் கலந்து கொள்ளும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

விழிசுட்டி
சங்கானை

உன்பிரிவால் வாடும்,
குடும்பத்தினர்.

(6878)

பொதுமக்கள்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.
தமிழீழ விடுதலைப் புலிகள்.

(சி-8108)

## ஒப்ரேசன் தவளை
## பூநகரி - நாகதேவன் துறை
## இராணுவ கூட்டுப் படைத் தளம் தகர்ப்பு
# வெற்றி நாள் 11, 12, 13

புகுந்தது புலிப்படை – பிளந்தது பூநகரி; பூநகரியில் புலிகள் ஆவேசம்
சிங்களப் படையணி சர்வ நாசம்; கொக்கரித்த சிசில் தலைமை
கொட்டமடங்கிப் போனது பார்

-நெல்லியடி வர்த்தகர் சங்கம்

(5866)

# 'பூ' நகரில் தவளை புது வெற்றி

பூநகரில் புலிகள் பேரடி!
சிங்கள அரசுக்கு இது கசையடி
டி. பிக்கு அதிவேக காட்டடி
சிப்பாய்களுக்கு இது புது அடி
சிசில் வீடு நோக்கி காவடி
"விடிவிற்காக எழுந்த சூரியனை
விளையாட்டுப் பொம்மை என்று நினைத்தான் எதிரி"

"நிலத்தை உடைத்துப் பீறும் நெருப்பாற்றை
கைகளால் பொத்தலாம் என்று நினைத்தான் பகைவன்"
இந்த மண் எங்களின் சொந்தமண்
இது எங்கள் தலைவனின் தேசம்
எதிரியின் கால்கள் எப்படிப் பதியும்?
ஓடு! இல்லையேல் நீ ஒழிவது நிச்சயம்

லீலா பேக்ஹவுஸ் & லீலாஸ்ரோஸ்
(ஸ்தாபனத்தார் சங்கானை, சண்டிலிப்பாய்)

(6860)

## கண்ணீர் அஞ்சலி



மண்ணில்
10-01-1972

விண்ணில்
13-11-1993

### கப்டன் இளையராஜா
### (ஸ்ரனிஸ்லாஸ் மோகன்ராஜ்)

எமது சமாச பொதுச் செயலாளர் திரு. கொ. அ. ஸ்ரனிஸ்லாஸ் அவர்களது ஏக புத்திரனான கப்டன் இளையராஜா (மோகன்ராஜ்) அவர்கள் 13-11-93இல் பூநகரி சமரின் போது வீரச்சாவைத் தழுவிக் கொண்டார். அன்னாரது ஆத்ம சாந்திக்காக பிரார்த்திப்பதுடன், அவரது மறைவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

201, 3-ம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

தலைவர்,
பணிப்பாளர்சபை, ஊழியர்கள்
வடமாகாணம் கடற்றொழிலாளர்
கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்.

(6830)

## ஓராண்டு நினைவஞ்சலி



தாயவளின் மடியினில்
03.11.1973

தமிழீழ விடிவினுக்கு
24.11.1992

### கப்டன் முத்துச்செல்வன்/நேரு
### (ஜெயரெட்ணம் பாலச்சந்திரன்/கிரி)

திதி: 13.12.93

பால் மணம் மாறாப் பாலகன் - நீ
பாவிகள் எமைப்பரிதவிக்க விட்டு
பார் மீட்கப் புறப்பட்டனையோ
வழிமேல் விழி வைத்து நீ
வருவாய் எனக் காத்திருக்க
வீறுகொண்டு எழுந்து நீ

## ஓராண்டு நினைவும், அந்தியேட்டி அழைப்பும்



### லெப். ரூபன்
### (வேலுப்பிள்ளை அருள்றாஜ்)

(பழுகாடு, காரைநகர்)

பிறப்பு;
16 - 05 - 1969

வீரச்சாவு:
20 - 11 - 1992

இன்று 13 - 12 - 93 அனைத்து போராளிகளையும், உறவினர்களையும், நண்பர்களையும் அன்புடன் அழைக்கிறோம்.

செல்லமுத்து பிளேகிறவுண் முகாம்
மானிப்பாய்.
குடும்பத்தினர்
(6863)

## 5-ம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில்
30
—
04
—
1969

தாயக மண்ணில்
13
—
12
—
1988


### லெப்டினன்ட் ஜோதிரவி
### (சண்முகம் வேல்ராஜ்)

வேல்ராஜா அகம், அல்லிப்பளை, பளை.

திதி : 18-12-1993

## 31-ம் நாள் நினைவஞ்சலி

''எட்ட நின்று குண்டுபோட்டு எமையழிக்கும்
கோழையின்
துட்டர்களின் தொகை நிறைந்த பூநகரிக்
கோட்டையை
கிட்டநின்று முட்டிமோதி கொன்றொழித்தகாதையின்
மட்டில்லாத பெருமை சேர்த்த மாவீரரைப்
போற்றுவோம்''



### லெப். கேணல் அருணண் (சூட்)

அவனிக்கு ஒளி ஏற்றும் அருணனைப் போலிங்கே
தமிழிற்கு ஒளி ஏற்ற அருணா நீ நெய்யானாய்
இழிவிற்கு ஆளானோம் இனி என்ன செய்வோம்
களத்திற்கே புறப்பட்டோம்வளமானமண் மீட்போம்

### கோல்ட்ஸ் இன்டஸ்றி
### கோல்ட்ஸ் அச்சகம்
### நிம்மதி கடை

(உரிமையாளர்களும் ஊழியர்களும்)

பலாலி றோட்,
உரும்பராய்.
(6877)

## 31-ம் நாள் நினைவு அஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



மலர்வு:
10-3-1912

மறைவு:
13-11-1993

திரு. சண்முகம் மார்க்கண்டு

## மருந்துகளுக்கு தட்டுப்பாடு

(தென்மராட்சி)

சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலையில் முக்கியமான மருந்துவகைகள் இல்லாததால் நோயாளர்கள் மிகவும் சிரமப்படும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள்.

சலரோக நோய்க்கு உரிய முக்கிய குளிசையான றஸ்ரிநோன் என்னும் குளிசைகள் கடந்த ஒரு மாதங்களுக்கு மேல் இவ்வைத்திய சாலையில் இல்லாததால் நோயாளர்கள் தனியார் மருத்துவ மனையில் வாங்கும் நிலைக்கு உள்ளாகியுள்ளனர்.

இதேவேளை இருதயநோய் சம்பந்தமான முக்கிய குளிசைகளும் இல்லாமல் மருந்துவர்கள் நோயாளருக்கு வெளிஇடத்தில் வேண்டுமாறு எழுதிக் கொடுக்கின்றார்கள் என மக்கள் கூறுகின்றனர்.

(86)

## காய்ச்சல் தீவிரம்

(தென்மராட்சி)

தென்மராட்சி பகுதியில் மலேரியாக் காய்ச்சல் பரவி வருவதாகத் தெரிய வருகிறது சாவகச்சேரி மருத்துவ மனையில் தினமும் இருபத்திரண்டுக்கும் அதிகமானோர் இதற்காக சிகிச்சை பெற்று வருவதாகவும் தெரிய வருகிறது.

இப்பகுதியில் கடந்த மாதத்தில் மட்டும் 481பேர் காய்ச்சலினால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் இதில் 81 பேர் மலேரியாவினால் பாதிக்கப்பட்டவர்கள் என்றும் கூறப்படுகின்றது.

கெற்பலி, மட்டுவில் போன்ற இடங்களிலேயே இக் காய்ச்சல் தீவிரமாகி இருப்பதாகவும் வைத்திய வட்டாரங்கள் கூறியுள்ளன.

(86)

## பாலர் கண்காட்சி

திருநெல்வேலி ஞானக்குழந்தைகள் இல்லத்தின் பாலர் கண்காட்சி இன்று முற்பகல் ஒன்பது மணி முதல் பிற்பகல் ஐந்து மணி வரை நடைபெறவுள்ளது. இவ் வைபவத்தில் பிரதம விருந்தினராக உடற்கல்விப் பணிப்பாளர் சி. தியாகராஜா கலந்து கொள்ளவுள்ளார்.

## விசேட அபிஷேகமும் பிரார்த்தனையும்

கடந்த மாதத்தில் பூநகரி முகாம் தகர்த்து தமிழ் ஈழ விடுதலைப்புலிகளின் போராளிகள் படைத்த வெற்றியை



தமிழீழ விடிவினுக்கு

24.11.1992

## கப்டன் முத்துச்செல்வன்/நேரு

(ஜெயரெட்ணம் பாலச்சந்திரன்/கிரி)

திதி: 13.12.93

பால் மணம் மாறாப் பாலகன் - நீ
பாவிகள் எமைப்பரிதவிக்க விட்டு
பார் மீட்கப் புறப்பட்டனையோ
வழிமேல் விழி வைத்து நீ
வருவாய் எனக் காத்திருக்க
வீறுகொண்டு எழுந்து நீ
தமிழ் மண்ணை மீட்டு எடுக்க - எம்
இதயபூமிபாம் பலாலி கிழக்கு
வளலாயில் மாவீரனானாயோ.

13.12.93 இன்று சகபோராளிகளையும், உற்றார், உறவினர்களையும், நண்பர்களையும் இந்நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

உன் பிரிவால் துயருறும்

புத்தூர் மேற்கு, நவக்கிரி. — தாய், தந்தை, சகோதரர்கள்.

(எல்லாளன் சனசமூக நிலைய அருகாமை)

(6855)

---

| தாயின் மடியில் | தாயக மண்ணில் |
|---|---|
| 30 | 13 |
| — | — |
| 04 | 12 |
| — | — |
| 1969 | 1988 |



## லெப்டினனட் ஜோதிரவி

(சண்முகம் வேல்ராஜ்)

வேல்ராஜா அகம், அல்லிப்பளை, பளை.

திதி : 18-12-1993

காலத்தின் நகர்வில் கரைந்தது ஐந்தாண்டு
கண்ணோடு வழிகின்ற நீர் மட்டும மாறவில்லை
செல்வா
அன்பாலே எம்மனதை மூழ்கடித்த எம்முயிரே
காரணத்தைச் சொல்லாது நீ கனவாகி போனதேன்.
நாட்கள் எத்தனை நகர்ந்தது இங்கேநீ மறைந்தாலும்
இனிய உன் நினைவு எம் இதயத்தால் மறைந்திடுமோ

ஓம் சாந்தி


என்றும் உன் நினைவில் வாழும்

கண்டாவளை, பரந்தன், — குடும்பத்தினர், உறவினர், நண்பர்கள்.

(6808)

---

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவில்லும்



மலர்வு: 10-3-1912

மறைவு : 13-11-1993

## திரு. சண்முகம் மார்க்கண்டு

கடந்த 13-11-1993இல் அமரத்துவம் அடைந்த எமது அன்புத் தெய்வம் திரு. சண்முகம் மார்க்கண்டு அவர்களின் அந்தியேட்டி சபிண்டீகரண கிரியை இன்று 13-12-1993-ல் அன்னாரின் இல்லத்தில் நடைபெற வுள்ளது. அத்தருணம் உறவினர், நண்பர்கள் அனைவரும் சமுகம் தந்து அன்றைய தினம் எமது இல்லத்தில் நடைபெறும் மதியபோசன வைபவத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாருக்கு இறுதிவரை சகல வகையிலும் உதவி புரிந்த அனைத்து அன்பர்களுக்கும் (Central Nursing Home) வைத்தியர்கள், ஊழியர்கள் மற்றும் இறுதிக் கிரியையில் கலந்து கொண்ட அனைவர்க்கும் எமது அன்பு கலந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

No. 4, மேதர்ஸ் லேன், மானிப்பாய். — மகன், மருமகள் திரு. திருமதி கிரிதரன்

(6857)

---

வட்டாரங்கள் கூறியுள்ளன.

(86)

### பாலர் கண்காட்சி

திருநெல்வேலி ஞானக்குழந்தைகள் இல்லத்தின் பாலர் கண்காட்சி இன்று முற்பகல் ஒன்பது மணி முதல் பிற்பகல் ஐந்து மணி வரை நடைபெற வுள்ளது. இவ் வைபவத்தில் பிரதம விருந்தினராக உடற் கல்விப் பணிப்பாளர் சி. தியாகராஜா கலந்து கொள்ளவுள்ளார்.

### விசேட அபிஷேகமும் பிரார்த்தனையும்

கடந்த மாதத்தில் பூநகரி முகாம் தகர்த்து தமிழ் ஈழ விடுதலைப்புலிகளின் போராளிகள் படைத்த வெற்றியை நினைவு கூரும் முகமாகவும் போராளிகளின் நலன்வேண்டியும் நல்லூர் சட்டநாதர் சிவன் ஆலயத்தில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் மூன்று மணியளவில் விசேட அபிஷேகமும் பிரார்த்தனையும் நடாத்தப்படவுள்ளன

### என். எஸ். எஸ். பி மறுப்பு

'பயங்கரவாதத்திற்கு எதிரான போர் இனப்பிரச்சினைக்கு ஓர் அரசியல் தீர்வு' என்ற தலைப்பில் எதிர்வரும் 15ஆம் திகதி நுகேகொடையில் நடைபெறவுள்ள எதிரணிக்கட்சிகளின் கூட்டத்தில் கலந்துகொள்ள நவசமசமாஜக்கட்சி மறுத்துள்ளது.

---

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில்

16.11.1974

தாயக விடிவில்

24.11.1992

## லெப். மலரவன்/மன்சூர்

(நல்லதம்பி ஞானசேகர்)

(தோப்பு அச்சுவேலி)

திதி: 13.12.93

ஒரு ஆண்டு அதற்குள் ஓடிப் போயிற்றா?
பெரும் வீரனே! உன் நினைவில்
சொரிந்த கண்ணீர் இன்னமும் காயவில்லை
வரும் காலம் உன் கனவு நனவாகியதை பதியும்.


அன்பு அப்பா, அம்மா, சகோதரர்கள்,

புத்தூர் கிழக்கு, ஊறணி. — வளர்ப்புத்தாய், தந்தை, உற்றார், உறவினர்.

(6812)

---

## 31-ம் நாள் நினைவஞ்சலி



மறைவு
13-11-1993

## ஜே. எப். சேவியர்

திரையோங்கு கடலோர நன்னீர்அற்ற
தரைபரவு குருநகரில் நீர்வழங்கும்
பெருமையுறு சேவையினில் நின்றவேளை
கருவானில் கரந்துவந்த சுப்பசோனிக்
கிரையாக வேண்டுமென்ற அச்சத்தாலே
கர்த்தரே காப்பாரென் றங்குசென்றாய்
கர்த்தர் முன்பே காலன்வாய்ப் பட்டாய் அந்தோ
உருகிவிழி நீர்சொரிய நிற்கின்றோமே

பண்பினில் நிறைந்து நின்றாய் பணியிலும் சிறந்து நின்றாய்
உண்மையே பேசிநாளும் உள்ளத்தால் நேர்மை காத்தாய்
அன்புசேர் நண்பர்க்கெல்லாம் அமிர்தமாய் இனித்து நின்றாய்
நண்பநீ மறைந்த செய்தி நம்உளம் தாங்காதன்றோ.

யாழ். மாநகரசபை ஊழியர் நலன்புரிச்சங்கம்,

(6873)

---

## ஒப்ரேசன் தவளை வெற்றி விழா

11,12,13 டிசம்பர் 1993

# பூநகரி வெற்றி நாள்

தேகத்தில் தீ மூட்டி
தீயவரை பொசுக்கிவிட்டு
புன்னகைத்த முகத்தோடு
பூரித்து நிற்கும்
எம் தாயகத்தின்
தலையிலே
வெற்றியின்
மகுடத்தை ஏற்றி
வைப்போம்.
இது
இனி என்றும்
தொடரும் .....

புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, (சி/8109) யாழ்ப்பாணம்.

# பூநகரி - நாகதேவன்துறை கூட்டுத்தளம் தகர்ப்பு
# (ஒப்ரேசன் தவளை)

# வெற்றிவிழா 11, 12, 13, டிசம்பர், 1993

## வடமராட்சிக் கோட்டத்தில் மேற்படி இறுதிநாள் வெற்றிவிழா

## சிறப்பாகக் கொண்டாடப்படும்

அனைத்து தமிழீழ மக்களையும் மேற்படி விழாவில் பங்குபற்றுமாறு
அன்புடன் அழைக்கின்றோம்

## வடமராட்சி கூட்டுறவு ஒன்றியம்

கட்டைவேலி - நெல்லியடி ப. நோ. கூ. சங்கம், உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கம்,
புலோலி ப. நோ. கூ. சங்கம், பருத்தித்துறை ப.நோ.கூ. சங்கம்,
மருதங்கேணி ப. நோ. கூ. சங்கம்.

(5864)

# உனது பாதையில் எமது பயணங்கள் தொடரும்!

தென்மராட்சிக் கோட்ட சிறப்புப் பொறுப்பாளர்

கட்டைவேலி - நெல்லியடி ப. நோ. கூ. சங்கம், உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கம்,
புலோலி ப. நோ. கூ. சங்கம், பருத்தித்துறை ப.நோ.கூ. சங்கம்,
மருதங்கேணி ப. நோ. கூ. சங்கம்.

(5864)

# உனது பாதையில் எமது பயணங்கள் தொடரும்!

## தென்மராட்சிக் கோட்ட சிறப்புப் பொறுப்பாளர்

# லெப். கேணல் குணா

(சுந்தரம் விஜயராசா) கல்வயல்

தாயக மடியில் : *28-11-1963* தாயக விடிவில் : *11-11-1993*



தடைகளை கடந்து படையினை நடத்தி
களம் பல வென்று மக்கள் உள்ளம்தனில் புகுந்தவனே
வந்த படையை விரட்டி அடிக்கவும்
வராமல் அங்கே தடுத்து நிறுத்தவும்
எந்தப் பொழுதிலும் ஓய்வின்றி உழைத்தவனே!
உனது பாதையில் எம் பயணம் தொடரும்

மீசாலை வடக்கு,
கொடிகாமம்.

K. P. R. ரான்ஸ்போட் சேவீஸ்
பொ. இராசகுமார் குடும்பத்தினர்

(சி- 8116)

# "ஒப்ரேசன் தவளை"

## பூநகரி - நாகதேவன்துறை இராணுவ கூட்டுப்படைத்தளம் தகர்ப்பு

# வெற்றி நாள்

## டிசம். 11, 12, 13

## பாரெங்கும் போர்வெற்றி முழங்கட்டும்

பொங்கடா தமிழா! "இங்குபோர் வெற்றி"-என்று
சங்கெடுத்து ஊதிச் சாற்றடா தமிழா!
வேங்கைகள் வெற்றி எங்களின் வெற்றி-இதை
வையகம் உணர்ந்திட வாழ்த்தடா தமிழா!

உதிரம் குடித்தவர் உறங்கியே கிடந்தார் - புலிகள்
அதிரும் வெடியுடன் புகுந்தபின் முடிந்தார்
சிதறியே ஓடிய பகைவரும் அங்கே - தம்
உதறிய ஆயுதம் எழுந்ததால் அழிந்தார்!

பொங்கடா தமிழா! "இங்குபோர் வெற்றி"-என்று
சங்கெடுத்து ஊதிச் சாற்றடா தமிழா!
வேங்கைகள் வெற்றி எங்களின் வெற்றி-இதை
வையகம் உணர்ந்திட வாழ்த்தடா தமிழா!

உதிரம் குடித்தவர் உறங்கியே கிடந்தார் - புலிகள்
அதிரும் வெடியுடன் புகுந்தபின் முடிந்தார்
சிதறியே ஓடிய பகைவரும் அங்கே - தம்
உதறிய ஆயுதம் எழுந்ததால் அழிந்தார்!

பீரங்கிப் படகுகள் தங்கிடும் துறையும் - அங்கே
பிளந்ததும் பகைவர் இழந்தது குறைவா?
டாங்கிகள் பவளும் எம்கால்களில் நின்றது ஆயுதம்
வேங்கைகள் கிடங்கோடு அள்ளியே வென்றது

பகைமுடித் தாடிய புலிகளைப் பாடடா - எம்
பிரபாகரன் பிள்ளைகள் வென்றதென்று ஆடடா!
தொகை தொகையாகவே பகைவரை வீழ்த்தும்-புலித்
தலைவன்தன் வீரத்தை திக்கெட்டும் வாழ்த்தும்!

**தங்கத் தலைவனின் காலத்தில் ஈழம் பெறுவோம் என்றே வாழ்த்துவோம்**

**நியூ லலிதா ஸ்தாபனத்தார்**

74/1, கஸ்தூரியார் வீதி,

யாழ்ப்பாணம்.

(சி-8114)

முல்லை மாவட்டச்
சிறப்புத் தளபதி



## லெப். கேணல் அன்பு (நாடி)

**மானம்காத்த வீரன்**

தமிழீழ மாந்தற்காய் - தன்
சுகபோகம் மறந்து - புலிவீரன்
என்று சொல்லி இணைந்தான்.
வீரன் அன்பு விடுதலைக்காய்,
சிங்களக் காடையரின் கொட்டம் - அடக்கி
சிறுத்தையென எழுந்தவன் - அன்று
மணலாறின் மானங் காத்த - தளபதி
அன்று அவன் - இன்று இவனின்
புகழ்பாடும் தரணியே என்றும்

அன்புவின் வீரம் சொன்னால் சிங்களக்
காடையற்கும் புல்லரிக்கும்
அன்பு அவன் மக்களுடன் தேன்கலந்தே
பேசினான் சின்னச் சிரிப்பு எவர் சிந்தையையும்
ஆழ்த்திவிடும் பூநகரிச் சமர் என்று சொன்னால்
புற்றரையும் இவன் வீரம் பேசும்

அன்பு என்று சொன்னால் மணலாறே விம்மி
அழும்
வீரம் தந்து, விடுதலை பெற வழிசமைத்த
லெப். கேணல் அன்புவிற்கு எம் - இதய
வீர அஞ்சலிகள்

5 ஆம் கட்டை,
அளம்பில்,
மணலாறு.

சிலன், தியாகலிங்கம்
குடும்பத்தினர்

(6871)

## அமைச்சு இணக்கம்

(நமது நிருபர்)

சுப்பசொனிக் போர் விமானம் மேற்கொண்ட தாக்குதலுக்கு இலக்காகி சேதமடைந்த யாழ் செயலக கட்டடத் திருத்த வேலைக்கான பொருள்களை வழங்குவதற்கு புனர்வாழ்வு புனர் நிர்மாணத்துறை அமைச்சு இணங்கியுள்ளதாக கொழும்பில் தற்போது தங்கியிருக்கும் யாழ் அரசாங்க அதிபர் செயலகத்திற்கு அனுப்பிய செய்திமூலம் தெரிவித்துள்ளார்.

மேற்படி சிறிலங்கா போர் விமானத்தின் தாக்குதலால் சேதமடைந்த கட்டடத்தை திருத்துவதற்கு தேவையான கூரைசீற்றுகள் சீமெந்து மற்றும் தேவையான பொருள்களை வழங்க சம்மதித்துள்ளதாக அவரது செய்திக்குறிப்பு தெரிவிப்பதாக செயலக உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (சி)

## பிரிகேடியரின் நம்பிக்கை

(கொழும்பு)

நீங்கள் ஒவ்வொருவரும் துட்ட கைமுனுக்கள் ஆவதன் மூலமே நாடு தலைநிமிர்ந்து வாழ முடியும் உங்களிலிருந்து பல துட்டகைமுனுக்கள் உருவாகுவார்கள் என்பதேஎனது நம்பிக்கை என பிரிகேடியர் ஆனந்த வீரசேகர கம்பஹா பண்டாரநாயக்க பாடசாலையில் நடைபெற்ற விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போது தெரிவித்தார்,

மேலும் அவர் கூறுகையில் நாம்அனைவரும் துட்டகைமுனுக்களாக மாறுவதன் மூலமே 'பயங்கரவாதத்தை' ஒழிக்கவேண்டும் வெற்றியை எம் பக்கம் சாய்க்க முடியும் என்றார்.

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
17.01.1919

மறைவு
13.12.1992



### மார்க்கண்டு தர்மலிங்கம்

(முன்னாள் உரிமையாளர் லீலா ஸ்ரோஸ்)
சங்கானை

ஓர் ஆண்டு சென்றாலும்
நீங்கா நினைவோடு
உம் நிழலில் வாழவென
வழிசமைத்த எமதருமை மாமாவே
எந்நாளும் நினைத்திடுவோம்
தம் இனிய வாழ்வு தனை

(6825) மனைவி, மருமக்கள், சகோதரர்கள்

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில்
30 - 12 - 1974

தாயக விடிவில்
24 - 11 - 1992

### 2-ம் லெப். துரியோதனன் - யசி

(மகாலிங்கம் றாஜீஸ்வரன்)

திதி : 13.12-93

மண்ணில்றா ஜீஸ்வரனெனும் நாமத்தில் உதித்த
நீயோ
தாய் மண்ணினைக் காக்கவென்று யசி - துரியோத
னனாக
விண்ணுறு புகழ்சேர் நாமஞ் சூடிநீ வளலாய்ப் போரில்
விண்ணுற்ற வீரச்செய்தி இன்று ஓர் அகவை ஐயா!

உன் பிரிவால் வாடும்
தந்தை, தாய்,
சகோதர சகோதரிகள்,
சக போராளி நண்பர்கள்.

கோப்பாய் வடக்கு,
கோப்பாய்.

(6823)

## கலை ஊடக இணைய காரியாலய அங்குரார்ப்பணம்

15-12-93 புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் யாழ்ப்பாணம் 117, மானிப்பாய் வீதியிலுள்ள ஐந்து சந்தியில் ''கலை ஊடக இணைய'' காரியாலயம் சம்பிரதாயபூர்வமாக திறந்து வைக்கப்படும். வீடியோ படப்பிடிப்பாளர்கள், வீடியோ நாடா விநியோகஸ்தர்கள், ஓடியோ நாடா விநியோகஸ்தர்கள் மற்றும் சகலரும் கலந்து சிறப்பிக்குமாறு வேண்டுகிறோம்.

—கலை ஊடக இணையம்

குறிப்பு:- இணையத் திறப்புவிழாவை தொடர்ந்து, இம்மாதம் 31-ம் திகதிவரை அங்கத்தவ பதிவுகள் நடைபெறும். தவறாது பதிவு செய்து கொள்ளவும்.

(6872)

## 31-ம் நாள் நினைவஞ்சலி



### லெப். ஜெயரூபன்

(மாணிக்கம் றஞ்சன்)
(அம்பாறை)


வீரச்சாவு:
13-11-1993

மழையெனப் பொழிந்த வேட்டினில் நனைந்து
சிந்திய குருதியால் நிலம் சேறெனவாகிட
பிழையிலா வீரனாய் விழுந்தாய் மண்மேல்
எழுகிறோம் நாம் உன்பணி தொடர...

-சகோதரன்

(6864)

## 31-ம் நாள் நினைவஞ்சலி



வீரம் தந்து. விடுதலை பெற வழிசமைத்த
லெப். சேணல் அன்புவிற்கு எம் - இதய
வீர அஞ்சலிகள்

5 ஆம் கட்டை,
அளம்பில்,
மணலாறு. (6871)

சீலன், தியாகலிங்கம்
குடும்பத்தினர்

தார்,

மேலும் அவர் கூறுகையில் நாம்அனைவரும் துட்டகைமுனுக்களாக மாறுவதன் மூலமே 'பயங்கரவாதத்தை' ஒழிக்கவேண்டும் வெற்றியை எம் பக்கம் சாய்க்க முடியும் என்றார்-



தாயக விடிவில்

24 - 11 - 1992

## 2-ம் லெப். துரியோதனன் - யசி


(மகாலிங்கம் றாஜீஸ்வரன்)

திதி : 13.12-93

மண்ணில்றா ஜீஸ்வரனெனும் நாமத்தில் உதித்த நீயோ
தாய் மண்ணினைக் காக்கவென்று யசி - துரியோதனனாக
விண்ணுறு புகழ்சேர் நாமஞ் சூடிநீ வளலாய்ப் போரில்
விண்ணுற்ற வீரச்செய்தி இன்று ஓர் அகவை ஐயா!

உன் பிரிவால் வாடும்
தந்தை, தாய்,
சகோதர சகோதரிகள்,
சக போராளி நண்பர்கள்.

கோப்பாய் வடக்கு,
கோப்பாய்.
(6823)



## [லெப். ஜெயரூபன்

(மாணிக்கம் றஞ்சன்)

(அம்பாறை)

வீரச்சாவு:
13-11-1993

மழையெனப் பொழிந்த வேட்டினில் நனைந்து
சிந்திய குருதியால் நிலம் சேறெனவாகிட
பிழையிலா வீரனாய் விழுந்தாய் மண்மேல்
எழுகிறோம் நாம் உன்பணி தொடர...

-சகோதரன்

(6864)

# 31-ம் நாள் நினைவஞ்சலி



## கப்டன் இளையராஜா

### (ஸ்ரனிஸ்லாஸ் மோகன்றாஜ்)

(யா) பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி உயர்தரவகுப்பு மாணவன்)

மண்ணில் மலராய்
1972-01-10

மண்ணில் வித்தாய்
1993-11-13

''அமைதி காக்கவே வருகிறோம் என்று
அலங்கார வார்த்தை பேசிவந்த அநியாயப் படையின்
அதிகார வெறியையும் அட்டூழியத்தையும் கண்டு
தாயக மண்ணை மீட்டெடுக்கவே தணியாத தாகம் கொண்டு
பொங்கி எழுந்து நீயும் புலியாகிப் போனாயோ

அஞ்சினர்க்கு சதாமரணம் அஞ்சாத நெஞ்சத்து
ஆடவர்க்கு ஒரு மரணம் என்பதை நீ உணர்ந்து
அண்ணண் காட்டிய பாதையே சரி என்று
புலியணி தன்னிலே இசைவுடன் சேர்ந்து
இளையராஜா என்ற பெயர்தனை ஏற்று.
முறையுடன் பயிற்சியை இனித்த முடித்து
மணலாறு மண்ணில் சரித்திரம் படைத்து
விரும்பியே நீயும் விழுப்புண் ஏற்றாயோ

போராட்டக் களத்திலே மலர்ந்த பல மலர்களில் நீயும் ஒரு மலர்!
பூநகரிச் சமரினிலே உதிர்ந்த பல மலர்களில் நீயும் ஒரு மலர்!
நீ உதிர்ந்த நாட்கள் முப்பத்து ஒன்று சென்றாலும்
எமக்கு நீ என்றென்றும் பூத்திருக்கும் புத்தம் புதிய மலர்தான்

பூநகரி முகாம் தகர்ப்பின் போது இவருடன் வீரச்சாவடைந்த வீரவேங்கைகளை இந்நாளில் நினைவு கூருகின்றோம். 13-12-93 இன்று எமது இல்லத்தில் நடைபெறும் நினைவு அஞ்சலியிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு போராளிகள் உற்றார், உறவினர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

கட்டைக்காடு,
முள்ளியான்-தாளையடி.

பெற்றோர் சகோதரி, உறவினர்.
(6818)

# தவளைத் தாக்குதல்

## பூநகரி கூட்டுப்படை தளம் தகர்ப்பு

# வெற்றிநாள்

வரலாற்று சிறப்பு மிக்க பூநகரி கூட்டுப்படை தளம் தகர்ப்பில்
வீரச்சாவைத் தழுவிக் கொண்ட வேங்கைகளுக்கு
**எமது வீரம் செறிந்த அஞ்சலி**

யாழ். குடாவை கைப்பற்றி தமிழ் மக்களை அழிக்கும் நோக்குடன் பூநகரியில் அமைக்கப்பட்ட கூட்டுப் படைத்தளம் தமிழீழ விடுதலைப்புலிகளால் கூண்டோடு அழிக்கப்பட்டது. அதனால் தமிழ் மக்கள் பாதுகாக்கப் பட்டுள்ளனர் என்பதை இன்று ஒவ்வொரு தமிழ் மக்களும் உணர்ந்துள்ளனர். அதனால்தான் பூநகரி கூட்டுப் படைத் தளத் தாக்குதலை வெற்றி நாளாக மக்கள் கொண்டாடுகின்றனர்.

இந்நாளில் நாங்களும் உவகை கொள்கிறோம்.

சாதனை படைக்கும் புலிகள் பூநகரியில்
மீண்டும் ஒரு சரித்திரம் படைத்தனர்
கூட்டுப்படைத் தளம் அதிர்ந்து ஓய்ந்தது
வேங்கைகள் வீரம் உலகினில் ஒலித்தது ஓங்கி
வியந்தது உலகம் - வீழ்ந்தது சிங்களப்படை
உயர்ந்தது தமிழ்மானம் உவகையில் தமிழ் மக்கள்

புங்குடுதீவு-நயினாதீவு ப.நோ.கூ.சங்கம்

(சி 8113)

### சிந்தனைக்கு

நம்சொந்த வரலாற்றை நாமே வரைவதால் பிறருக்கு பல வேளைகளிலும் தீர்க்கதரிசிகளாய் அமைகிறோம்.

-- மதாம் ஸ்வெட்ரீன்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 13-12-1993

தொலைபேசி

ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2023

த. பெ எண் - 05

## கண்ணை விற்று சித்திரம் வாங்க

பேரினவாதச் சிந்தனை சிறிலங்காவின் கண்களை முற்றாக மறைத்து விட்டது. எதை இழந்தாலும் பரவாய் இல்லை தமிழரின் தேசிய இன விடுதலைப் போராட்டம் தோற்கடிக்கப்பட வேண்டும். தமிழ் இனம் அழித்தொழிக்கப்பட வேண்டும் என்பதே அதன் குறிக்கோளாக இருக்கின்றது.

இதனை வெளிப்படுத்துமாப் போலவே அண்மையில், புலிகளுக்கு எதிரான போருக்கு மீண்டும் வெளிநாட்டு உதவிகள் பெறப்பட வேண்டும் என்ற கோரிக்கை தென்னிலங்கையில் எழத்தொடங்கியுள்ளது. இது குறித்து, கொழும்புப் பத்திரிகைகளும், அரசியல்வாதிகளும் பலமாகவே பேசத்தொடங்கியுள்ளனர். அரசாங்கமும் இது குறித்து தீவிரமாகச் சிந்தித்து வருவதாகவும் அறியவருகின்றது.

சிறிலங்கா அரசாங்கம் ஏற்கனவே பொருளாதாரச் சீர்திருத்தம் என்ற ரீதியில் தனது பொருளாதார சுதந்திரத்தை வெளிநாட்டவரிடம் இழந்துள்ளது. சர்வதேச நாணய நிதியமும், உலக வங்கியும் உதவி வழங்கும் நாடுகளுமே சிறிலங்காவின் பொருளாதாரக் கொள்கையை வகுப்பவர்களாகவும், நடைமுறைப்படுத்துபவையாகவும் உள்ளன. மேலும் யுத்தத்தினால் ஏற்படும் பெருந்தொகைச் செலவீடும் சிறிலங்காவை முழுமையாகக் தங்கியிருக்கும் நாடாகவே மாற்றியுள்ளது

இதனால் இழக்கப்பட்டது தனியாகப் பொருளாதாரச் சுதந்திரம் என்று கூறிவிடவும் முடியாது, ஏனெனில் இதன் மூலம் கணிசமான அளவில் அதன் இறைமை பறிகொடுக்கப்படுகின்றது. சிறிலங்கா அரசின் வெளிநாட்டுக் கொள்கையில் இருந்து உள்ளூர் அரசியல் நடவடிக்கைகள் வரை இப் பொருளாதார உறவு கட்டுப்பண்ணுவதாக உள்ளது.

இந்நிலையில், தமிழருக்கெதிரான போரில், வெளிநாடுகளின் உதவியைப் பெறுதல் என்பது முற்றாகவே அரசியல் இறைமையைச் சிறிலங்கா இழப்பதாகவே முடியும். அதாவது, தமிழரின் அடிப்படை உரிமைகளை வழங்க மறுக்கும் சிறிலங்கா அரசாங்கம், அதனை ஒடுக்குவதற்காக தனது அடிப்படை உரிமைகளையும், சுதந்

## மட்டு. அகதி முகாம்களில் ஒருலட்சம் அகதிகள்

மட்டக்களப்பு அகதிமுகாம்களில் தற்போது ஒரு லட்சத்து பத்தாயிரம் தமிழ் அகதிகள் வாழ்கின்றனர் அங்கு பத்து முகாம்களே உள்ளன.

இவர்களில் பெரும்பாலானோர் மண்முனைப் பிரிவில் வாழ்கின்றனர். இவர்கள் தமது சொந்த இடங்களுக்குப் போக வேண்டும் என்ற அரச அதிகாரிகளின் உத்தரவுக்குப் பணியாததால், நிவாரணக் கொடுப்பனவுகளில் கெடுபிடிகள் கையாளப்படுகின்றன அண்மையில் ஏற்பட்ட மழைக்கும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

தேர்தலைநடத்துதல் தமது கட்டுப்பாட்டில் இருத்தல்என்பதைக்காட்டுவதற்காகத் தமிழர்கள் எந்தவிதப் பாதுகாப்பும் அற்ற இடங்களில் குடியமரும்படி மிரட்டப்படுகின்றார்கள்

இதேவேளை இங்குள்ள தமிழ் மக்களின் குடியிருப்புக்களைத் திருத்தி அமைக்க 523 மில்லியன் ரூபாதேவைப்படும் என மதிப்பிடப் பட்டிருக்கிறது.

## புலிகளின் இராணுவ . . .

பாடம் படித்துக்கொண்டும், எமது ஒவ்வொரு வெற்றியிலிருந்தும் நாம் பாடம் படித்துக்கொண்டும்இருக்கிறோம்

கல்விக்காகவும் எம்மையே நம்பினோம், ஆயுதங்களுக்காகவும் எம்மையே நம்பினோம். முழுமையாக எம்மையே நம்பி, எமது மக்களையே நம்பி, எமது போராளிகளையே நம்பி இந்த பெரும் சமருக்கான திட்டம் எமது தலைவரால் தீட்டப்பட்டது.

ஒரு மிக நீண்ட காலத்தை ஒரு வருடத்தின் கால் பகுதி காலத்தில் எமது போராளிகளில் எவருமே இரவில் தூங்கியதில்லை. அவர்கள் பகலில் தான் தூங்கினார்கள். அவர்கள் பகலில் தூங்குவதற்கான நேரம்அட்டவணையாக பிரித்துக்கொடுக்கப்பட்டது. அவர்கள்தங்கள் இரவுகளைப்பகல்களாக்கபயிற்றப்பட்டார்கள் அவர்களின் உடல்கள் பயிற்சியை ஆரம்பித்த குறுகிய காலத்திற்குள்ளேயே அவர்களது உடல்கள் நாம் வெளிப்படையாகவே பார்க்கக்கூடிய அளவில் மாற்றம் கண்டன.

அந்த மாற்றங்கள் அவர்கள்உடல்ரீதியாகச் சோர்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை எமக்கு உணர்த்தும் அதேவேளை நாம் அவர்களுடன் உரையாடும் போது அவர்கள் பார்வைக்குத் தான் சோர்வாகத் தெரிகிறார்களே தவிர அவர்கள் மனரீதியாக பெரியளவிலே உறுதிபெற்று தம்மை இந்தப் போருக்கு தயார்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நாம் கண்டோம்.

கிளாலிக் கடலிலே பொது

வோம் என்ற உறுதியுடன் இருந்தோம். சண்டைக்கான பெரியளவிலான தயாரிப்புகள் பூர்த்தியடைந்த நிலையில் எமக்கு புலோப்பளைச் சமர் வந்தது. இந்தச் சமர் வெற்றியாக முடிந்த போதும் நாம் அந்தச் சண்டையிலே 80 ற்கு மேற்பட்ட போராளிகளை இழந்தோம் பெருமளவு போராளிகள் காயமடைந்த நிலை சண்டைக்கான எல்லா ஏற்பாடுகளும் ஸ்தம்பிதமடையும் நிலையில் இருந்தன அப்போது மீண்டும் நாம் புதிய தயாரிப்புக்காக எமது நாட்களையும் போராளிகளையும் ஈடுபடுத்திக் கொண்டிருந்தோம் அந்த வேளையில் நாம் இந்தத் தாக்குதலை இன்னும் சில காலத்திற்கு ஒத்தி வைப்போமா என்ற ஒரு நிலையிருந்தது அந்த வேளையிலே நாம் ஒத்தி வைப்பது எதிரிக்கு சாதகமான விளைவுகளை ஏற்படுத்தி விடக்கூடும் என்ற உறுதியான முடிவை தலைவர் அவர்கள் தெரிவித்தார் அந்தவேளையிலே எமது போராளிகள் மிகக் குறுகிய காலத்தில் நீர்ப்பயிற்சிக்கு உட்படுத்தப்பட்டனர் அந்த வேளை அரசியல் வேலைகளில் ஈடுபட்டிருந்த சில போராளிகள் கூட களத்திற்குச் சென்றார்கள் முதலில் அணிகள் மீளமைப்புச் செய்யப்பட்டன யுத்தத்திற்கான பயிற்சிகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டன.

### நம்பிக்கையூட்டிய புலோப்பளை சமர்

புலோப்பளைச் சமர் எமது இந்த வெற்றிக்கு கட்டியம்

பாதுகாப்பு என்பது அதன் இராணுவ வலிமையிலேயே தங்கியுள்ளது. எமது இராணுவ வலிமையை அதிகரிப்போமாக இருந்தால் நாம் பாதுகாப்பாக இருப்போம் நாம் இராணுவ ரீதியாக பல வீனமடைவோமாக இருந்தால்நாம் அழிக்கப்படுவோம் என்ற உண்மை நீண்ட நெடுங்காலமாக இங்கு நீடித்து வருகிறது.

தமிழீழத்தில் தமிழன் வீரமுடன் போராடுகின்றான் என்றசெய்தி உலகெங்கணும் உள்ள தமிழர்களுக்கு ஒரு பாதுகாப்பு கவசமாக எந்தக் காலத்திலும் விளங்கும் என்ற உண்மையை நீங்கள் ஒவ்வொருவரும் உங்கள் நெஞ்சங்களில் நிறுத்த வேண்டும். இது 93ஆம் ஆண்டு. இதற்கு 10 ஆண்டுகளுக்கு முன் ஒரு 83ஆம் ஆண்டு வந்தது. தமிழீழபோராட்ட வரலாற்றில் இந்த 83ஐயும் இந்த 93ஐயும் நினைத்துப் பாருங்கள். சிறிலங்காதேசத்தில் தெருத்தெருவாக எங்கள் தமிழர்கள் பெருந்தொகையாக எரிக்கப்பட்டார்கள் 13 ராணுவத்தினர்கொல்ல பட்டதேஅதற்கு காரணம் எனக்கூறினார்கள். ஆனால் இன்று இந்தப் பூநகரியில் ஆயிரம் படையினர், புலோப்பளையில் பெருமளவு படையினர், மண்கிண்டிமலையில் பெருமளவு படையினர் கொல்லப்பட்டனர். ஆனால் இன்று தமிழர் பாதுகாப்பாக இருக்கின்றார்கள்.

எமது இராணுவ வலிமை உலகெங்கணும் உள்ளதமிழர்களையும் பாதுகாக்கும் கவசமாக இருக்கும் என்பதை நீங்கள் ஒவ்வொருவரும் உங்கள் நினைவில் கொள்ளுங்கள்.

இந்தநேரத்தில்எனக்கொரு சம்பவம் நினைவிற்கு வருகிறது. 1988ஆம் ஆண்டு எமது தலைவர்அவர்கள் கொல்லப்பட்டதாக உலகெங்கும் ஒரு செய்தி இந்திய அரசினால் பரப்பப்பட்டது.அந்தவேளையில் இந்தியாவிலுள்ள பெங்களூர் என்ற நகரில் உள்ள தமிழர்கள் தாக்கப்பட்டார்கள். தமிழர்கள் பெரியளவில் தாக்கப்பட்டார்கள். என்னவென்று எவருக்கும் தெரியவில்லை. அங்கு தாக்கப்பட்ட ஒரு சில தமிழர்களை நாம் கேட்டபோது சொன்னார்கள். உங்களுக்கு பாதுகாப்பான பிரபாகரன் தான் இறந்து விட்டாரே இனி உங்களுக்கு யார் பாதுகாப்பு என்று சொல்லித் தாக்கினார்கள் என்று சொன்னார்கள்.

இரண்டு நாட்களில் உலக நிறுவனங்கள் அறிவித்தன பிரபாகரன் இறந்து

## நாட்டை பிரிக்கும் அளவுக்கு யுத்தம் பரிணமித்துள்ளது

சுதந்திரத்திற்குப் பின்னர் சிறிலங்கா முகம் கொடுத்த வேதனை தரும் சம்பவமாகவே சென்ற மாதத்தின் பூநகரி சம்பவம் அமைந்துவிட்டது. வரலாற்றில் என்றுமே சந்திக்காத அளவில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டும் காயமடைந்த நிலையிலும் இருந்துள்ளனர். இவ்வாறு ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவரும், முன்னாள் அமைச்சருமான காமினி திஸநாயக்கா கூறியுள்ளார்பாதுகாப்புஇராஜாங்க அமைச்சராக இருந்த ஒருவர், ஜனாதிபதியாக இருக்கும்போது இப்படியான சம்பவம் நடைபெற்றுள்ளமை மேலும் விசேடமாகிறது என்றும் தெரிவித்தார்.

தேசிய இனப்பிரச்சினையின் காரணமாக ஆரம்பித்த கெரில்லாச் சண்டை தற்போது நாட்டைப் பிரிக்கும் அளவுக்கு யுத்தமாகப் பரிணமித்துள்ளது என்றார்.

### இன்று நாம்

அல்ல. நாங்கள் பெருமைப்பட அல்ல. இந்த ஆயுதங்களை அடுத்த சந்ததி ஏந்திப் போராடும்.இதன்மூலம்தமிழீழத்தை வென்றெடுப்பார்கள் என்ற அசையாத நம்பிக்கையில் தான் இந்த வேதனைகளோடும்.துன்பங்களோடும் நின்று உறுதிதளராது அந்த ஆயுதங்களை வெளியே கொண்டு வந்தோம்.

இன்று அந்த ஆயுதங்கள் எமது ஆயுதக்களஞ்சியங்களில் காத்துக் கிடக்கின்றன.இவை சும்மா வந்த ஆயுதங்கள் அல்ல. எமது போராளிகள் தமது உயிரைக் கொடுத்துப் பெற்ற ஆயுதங்கள் எனவே இந்த ஆயுதங்களை ஏந்த வேண்டிய பொறுப்பும் கடமையும் ஒவ்வொரு தமிழ் மகனுக்கும் உண்டு என்பதை நீங்கள் ஒவ்வொருவரும் உணர்ந்து கொள்ள வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் கலந்து கொண்ட யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர்திரு. இளம்பரிதி பேசும் போது, பூநகரித்தளம் மீது நாம்மேற்கொண்ட நடவடிக்கையானது எமது போராட்டத்தில் அன்னிய சக்திகள் தலையிடுவதைத் தவிர்த்துக் கொண்டுவிட்டது என்று தெரிவித்தார். அவர் தொடர்ந்து பேசும்போது, பூநகரியில் கூட்டுப்படைத் தளத்தை தகர்த்தெறிந்ததன் மூலம் தமிழீழத்தில் உள்ள ஏனைய தளங்களையும் அழித்துவிடக்கூடிய அளவுக்கு நாம் அறிவு, அனுபவம் ஆகியவற்றைப்பெற்றுக் கொண்டுவிட்டோம். அத்துடன் புதிய நம்பிக்கையையும் பெற்றுக்கொண்டு விட்டோம் இத்தனைக்கும் மேலாக தமிழீழத்தில் இன்று ஓர் உன்னதமான தியாகங்கள் நிறைந்த ஒரு விடுதலைப் போராட்டம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்பதை நாம் உலகுக்கு உணர்த்தியுள்ளோம் என்றார்.

இக்கூட்டத்தில் கலந்து கொண்ட யாழ். மாவட்ட மகளிர் அமைப்புப் பொறுப்பாளர் செல்வி தணிகைச்

### பாண்ட் இசை

மைதானத்தில் நடைபெற்றது. கூடிநின்ற மக்களை பெருமளவில் கவர்ந்த ஒரு நிகழ்வாக இக் காட்சிஅணிவகுப்பு அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந் நிகழ்வைத் தொடர்ந்து பூநகரி படைத்தளம் தகர்ப்பில் வீரகாவியம் படைத்த காவிய நாயகர்களினது பெயர்கள் ஒலி பெருக்கியில் வாசிக்கப்பட்டது.

அதேசமயம்மைதானத்தின் கிழக்குப்புறமாக அமைக்கப்பட்டிருந்த கொட்டகை ஒன்றில் மேற்படி வீரச்சாவெய்திய போராளிகளின் உருவப் படங்கள் வைக்கப்பட்டிருந்தன. இவற்றிற்கு அப்போராளிகளின் பெற்றோர் சக போராளிகள் மற்றும் பொது மக்கள் ஆகியோர் நீண்ட வரிசையில் நின்று அஞ்சலி செலுத்தினர். இந்நிகழ்வைத் தொடர்ந்து மாலை 5-00 மணியளவில் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

தீவகக் கோட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. செம்மணன் தலைமையில் நடைபெற்ற இப் பொதுக் கூட்டத்தில் தலைமை உரையைத் தொடர்ந்து யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி, யாழ். மாவட்ட சிறப்புத்தளபதி திரு. செல்வராசா, யாழ். மாவட்ட மகளிர் அமைப்புப் பொறுப்பாளர் தணிகைச் செல்வி, மகளிர் படையணியைச் சேர்ந்த செல்வி ராதா மற்றும் விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் திரு. பொட்டுஅம்மான் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

இறுதியில் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

சிறிருந்தும் என்ற ரீதியில் தனது பொருளாதார சுதந்திரத்தை வெளிநாட்டவரிடம் இழந்துள்ளது. சர்வதேச நாணய நிதியமும், உலக வங்கியும் உதவி வழங்கும் நாடுகளுமே சிறிலங்காவின் பொருளாதாரக் கொள்கையை வகுப்பவர்களாகவும், நடைமுறைப்படுத்துபவையாகவும் உள்ளன. மேலும் யுத்தத்தினால் ஏற்படும் பெருந்தொகைச் செலவீடும் சிறிலங்காவை முழுமையாகத் தங்கியிருக்கும் நாடாகவே மாற்றியுள்ளது.

இதனால் இழக்கப்பட்டது தனியாகப் பொருளாதாரச் சுதந்திரம் என்று கூறிவிடவும் முடியாது, ஏனெனில் இதன் மூலம் கணிசமான அளவில் அதன் இறைமை பறிகொடுக்கப்படுகின்றது. சிறிலங்கா அரசின் வெளிநாட்டுக் கொள்கையில் இருந்து உள்ளூர் அரசியல் நடவடிக்கைகள் வரை இப் பொருளாதார உறவு கட்டுப்பண்ணுவதாக உள்ளது.

இந்நிலையில், தமிழருக்கெதிரான போரில், வெளிநாடுகளின் உதவியைப் பெறுதல் என்பது முற்றாகவே அரசியல் இறைமையைச் சிறிலங்கா இழப்பதாகவே முடியும். அதாவது, தமிழரின் அடிப்படை உரிமைகளை வழங்க மறுக்கும் சிறிலங்கா அரசாங்கம், அதனை ஒடுக்குவதற்காக தனது அடிப்படை உரிமைகளையும், சுதந்திரத்தையும் இழக்கத் தயாராக இருக்கின்றது. இது கண்ணைக் கொடுத்து சித்திரம் வாங்குவதற்கு சிறிலங்கா தயாராக இருப்பதையே காட்டுகின்றது.

இதேவேளை, வெளிநாட்டு உதவியின் மூலம் தமது ஆதிக்கம், இறைமை என்பவை பாதிக்கப்படும் என்பது சிறிலங்கா அரசாங்கம் புரியாத தொன்றல்ல. 1987 சமாதான உடன்படிக்கை மூலம் இலங்கை வந்த இந்திய இராணுவம், பெயரளவில் தவிர, சிறிலங்கா அரசின் ஆணையை எப்பொழுதும் மதித்ததே இல்லை என்பதும், தனது விருப்பின் படியே செயற்பட்டது என்பதும் மறந்துவிடக் கூடியதும் ஒன்றல்ல.

மேலும் இந்திய இராணுவம் இலங்கையில் இருந்து வெளியேறியமையானது, சிறிலங்கா அரசாங்கம் வெளியேறுமாறு கேட்டுக்கொண்டதற்காகவே என சிங்கள அரசியல்வாதிகளும், பத்திரிகைகளும் கருதுவார்களேயானால், அவர்கள் அன்றைய அரசியலின் யதார்த்தத்தை விளங்கிக் கொள்ளவில்லை என்றே கருத வேண்டும் ஏனெனில் இந்திய இராணுவத்தை இலங்கையில் இருந்து வெளியேற்றியது விடுதலைப் புலிகளும், தமிழ்மக்களுமே ஒழிய சிறிலங்கா அரசு அல்ல என்பதே உண்மை.

அதாவது யாருக்காக இலங்கைக்கு வந்ததாக இந்தியா கூறிக்கொண்டதோ அம்மக்களே இந்தியாவை வெளியேறுமாறு போரிட்டது இலங்கையில் இந்திய இராணுவம் தரிப்பதற்குரிய தார்மீக பலத்தை இழக்கச் செய்தது. அத்தோடு விடுதலைப் புலிகளின் தொடர்ச்சியான தாக்குதலினால் பல இழப்புக்களைச் சந்தித்த இந்திய இராணுவத்திற்கு இலங்கையில் போரிடுவதே அச்சத்தையும் வெறுப்பையும் ஊட்டியது. வெற்றிபெற முடியாத போர் என்பதைப் புரிந்து கொண்டமை அவர்களுக்குப் பெரும் சலிப்பூட்டியது. இந்நிலையில் எவ்வாறெனினும் வெளியேறினால் போதும் என்ற நிலையில் இருந்த இராணுவத்திற்கு சிறிலங்கா அரசின் கோரிக்கை சாட்டாக மட்டுமே அமைந்தது.

இந்நிலையில் விடுதலைப் புலிகளும், தமிழ் மக்களும் இந்திய இராணுவத்திற்கு எதிராகப் போராடாது விட்டால் அது இலகுவில் இலங்கையை விட்டுவெளியேறி இருக்காது. சிறிலங்காவால் வெளியேற்றி இருக்கவும் முடியாது.

இவற்றையெல்லாம் கணிப்பீடு செய்யாது, மீண்டும் அந்நிய நாட்டு உதவிகளைப் பெற்றுக் கொள்வது என்பது தனது இறைமை என்பதை விட தமிழரின் உரிமை மறுக்கப்பட வேண்டும் என்பதிலேயே சிறிலங்கா குறியாக உள்ளதையே காட்டுகிறது அதாவது தமக்கு மூக்கு போனாலும் பரவாய் இல்லை. எதிரிக்குச் சகுனப்பிழை ஏற்பட்டால் போதுமென்ற நிலையின் வெளிப்பாடு இதுவாகும்.

நேரம்அட்டவணையாக பிரித்துக்கொடுக்கப்பட்டது. அவர்கள்தங்கள் இரவுகளைப்பகல்களாக்கபயிற்றப்பட்டார்கள் அவர்களின் உடல்கள் பயிற்சியை ஆரம்பித்த குறுகிய காலத்திற்குள்ளேயே அவர்களது உடல்கள் நாம் வெளிப்படையாகவே பார்க்கக்கூடிய அளவில் மாற்றம் கண்டன.

அந்த மாற்றங்கள் அவர்கள்உடல்ரீதியாகச் சோர்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை எமக்கு உணர்த்தும் அதேவேளை நாம் அவர்களுடன் உரையாடும் போது அவர்கள் பார்வைக்குத்தான் சோர்வாகத் தெரிகிறார்களே தவிர அவர்கள் மனரீதியாக பெரியளவிலே உறுதிபெற்று தம்மை இந்தப் போருக்கு தயார்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நாம் கண்டோம்.

கிளாலிக் கடலிலே பொது மக்கள் சிறிலங்கா கடற்படையினரால் கொல்லப்பட்ட செய்தியைக் கேட்கும் ஒவ்வொரு நாளும் எமது பயிற்சிப்போராளிகள் வேதனைப்பட்டார்கள் எமது மக்கள் கொல்லப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். நாம் இந்தத் தாக்குதலை தாமதித்துக் கொண்டிருக்கிறோம் என்று அவர்கள் சலித்துக் கொண்டார்கள்.

அந்த சலிப்பு அவர்களை அவர்களது வெற்றிக்காக முன்னோக்கித் தள்ளியது. இது அவர்களது உறுதிக்கு உரம் சேர்த்தது. இந்தச் சண்டையின் வெற்றி எமக்கு எதைச் சுட்டிக் காட்டி நிற்கிறது என்பதை நாம் ஒவ்வொருவரும் இந்த நேரத்தில் சிந்திப்பது நல்லது,

## எந்தப்படையையும் வெல்வோம்

ஒரு சிறிய படை அணியினராகிய நாம் எமது மன உறுதியை வளர்த்து அந்த உறுதியுடன் எதிர்கொள்வோமாகயிருந்தால் எந்தப் பெரிய படையணியையும் நாம் வெல்லலாம் என்ற உறுதியை எமது இந்த சண்டை காட்டி நிற்கிறது என்பதை நீங்கள் ஒவ்வொருவரும் உணர்ந்து கொள்வீர்கள் என நான் நினைக்கிறேன்,

இன்று தனித்து நிற்கும் எமது இனத்திற்கு தேவையானது அதுதான் நாம் எமது சொந்தப் பலத்திலே எம்மை நம்பி எமது இராணுவ ரீதியான பலத்தை வளர்த்துக் கொண்டு நாம் சொந்தக் காலிலே நிற்க வேண்டும். இதை வெறும் வார்த்தைகளாக இல்லாது செயல்ரீதியாக இன்று புலி வீரர்கள் இந்த தமிழீழ போராட்டத்திலே நிரூபித்துக் காட்டியுள்ளார்கள், எம்மைப் பொறுத்த வரையில் நாம்இந்த சண்டையில் வெல்

காலத்திற்கு ஒத்தி வைப்போமா என்ற ஒரு நிலையிருந்தது அந்த வேளையிலே நாம் ஒத்தி வைப்பது எதிரிக்கு சாதகமான விளைவுகளை ஏற்படுத்தி விடக்கூடும் என்ற உறுதியான முடிவை தலைவர் அவர்கள் தெரிவித்தார் அந்தவேளையிலே எமது போராளிகள் மிகக் குறுகிய காலத்தில் நீர்ப்பயிற்சிக்கு உட்படுத்தப்பட்டனர் அந்த வேளை அரசியல் வேலைகளில் ஈடுபட்டிருந்த சில போராளிகள் கூட களத்திற்குச் சென்றார்கள் முதலில் அணிகள் மீளமைப்புச் செய்யப்பட்டன யுத்தத்திற்கான பயிற்சிகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டன.

## நம்பிக்கையூட்டிய புலோப்பளை சமர்

புலோப்பளைச் சமர் எமது இந்த வெற்றிக்கு கட்டியம் கூறும் முன்னுரையாக அமைந்ததென நான் நினைக்கிறேன் இந்த புலோப்பளை சமரின் வெற்றி எமது போராளிகளுக்கு மிகுந்த ஒரு நம்பிக்கையையும் சிறிலங்காவின் மிகவும் நம்பிக்கைக்குரியடாங்கிகளைக் கூட நாம் சுலபமாக கையாளலாம் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியது.

புலோப்பளைச் சமரைத் தொடர்ந்து எமது போராளிகள் டாங்கிகளை எப்படி ஓட்டுவது எப்படி ஓட்டி வருவது என்று தமக்குள் விவாதிக்கத் தொடங்கிய அரிய காட்சியை கண்டோம்.

அவர்கள் அந்த நேரம் டாங்கிகள் ஓட்டுவது எப்படி என விவாதித்ததைப் பார்த்தால் எவரும் சிரித்திருப்பார்கள். வெளியார் ஒருவர் பார்த்திருந்தால் நிச்சயம் சிரித்திருப்பார். ஆனால் எமது போராளிகள் முன்பின் அறியாத அந்த டாங்கிகளை-எதிரியால் மிகவும் நம்பிக்கையுடன் எமக்கு எதிராக பயன்படுத்தப்பட்டுவந்த அந்த டாங்கியை எதுவிதமுன் அனுபவமும் இல்லாத எமது புலிவீரர்கள் வெறும் வார்த்தைகளிலான அறிவுரைகளை மட்டும் பெற்றுக்கொண்டிருந்த புலிவீரர்கள் அதனை ஓட்டிவந்தார்கள்.

எதற்குச் சொல்கிறேன் என்றால் இந்தச் சண்டை நடைபெறுவதற்கு முன்னர் எமது போராளிகளிடம் இருந்த நம்பிக்கை அதீதமானது. அந்த நம்பிக்கையை மக்கள் எல்லோரும் பெறுவார்களாக இருந்தால் இந்தத் தமிழீழம் தமிழீழ்த்தின் சுதந்திர நாள் எமது தலைவர் பிரபாகரனே கலந்து கொள்ளக் கூடியதாக அண்மித்ததாக சாத்தியமானதாகவே இருக்கும்.

## ராணுவ வலிமையே தமிழரின் பாதுகாப்பு

இன்று தமிழர்களின், தமிழினத்தின் ஒட்டு மொத்த

இந்தநேரத்தில்எனக்கொரு சம்பவம் நினைவிற்கு வருகிறது. 1988ஆம் ஆண்டு எமது தலைவர்அவர்கள் கொல்லப்பட்டதாக உலகெங்கும் ஒரு செய்தி இந்திய அரசினால் பரப்பப்பட்டது.அந்தவேளையில் இந்தியாவிலுள்ள பெங்களூர் என்ற நகரில் உள்ள தமிழர்கள் தாக்கப்பட்டார்கள். தமிழர்கள் பெரியளவில் தாக்கப்பட்டார்கள். என்னவென்று எவருக்கும் தெரியவில்லை. அங்கு தாக்கப்பட்ட ஒரு சில தமிழர்களை நாம் கேட்டபோது சொன்னார்கள். உங்களுக்கு பாதுகாப்பான பிரபாகரன் தான் இறந்து விட்டாரே இனி உங்களுக்கு யார் பாதுகாப்பு என்று சொல்லித் தாக்கினார்கள் என்று சொன்னார்கள்.

இரண்டு நாட்களில் உலக நிறுவனங்கள் அறிவித்தன பிரபாகரன் இறந்துவிட்டார் என்ற செய்தி தவறானது என்று. தமிழர்கள் மீதான தாக்குதல் உடனே நிறுத்தப்பட்டது.

இன்று புலிகளின்இராணுவ ரீதியான வளர்ச்சி என்பது ஒட்டு மொத்த தமிழினத்தின் பாதுகாப்பு வளர்ச்சியின் புதிய பரிணாமம் என்று நாம் ஒவ்வொருவரும் ஞாபகத்தில் கொள்ள வேண்டும்.

இன்று எமது நாடு முழுவதுமே முழுமையாக அணிதிரளுமேயானால் நாம் தமிழீழத்தை வெல்வது என்பது மிகுந்த அண்மித்ததாக இருக்கும். இந்த வெற்றிக்காக எல்லா மக்களும் அணிதிரள்வது என்பது தான் இன்று எமக்கு இருக்கும் தேவை.

பூநகரித் தாக்குதலின் பின்னர் நாம் அந்த இடத்தில் நிற்பது நிற்காமல் விடுவது என்ற கேள்விகளுக்கு அப்பால் நாம் பூநகரி முகாமை வெல்வது என்ற திட்டத்துடன் சென்றோம். வென்றோம். வந்துவிட்டோம். அதற்கு அடுத்த கட்டத்திற்கு நாம் செல்ல வேண்டுமாயிருந்தால் நாம் அடுத்தகட்ட இராணுவ வளர்ச்சிக்குச் செல்ல வேண்டும்.

## 10 ஆண்டுகளில் பெருவளர்ச்சி

எமது இனம் ஒரு பத்து ஆண்டு காலத்துக்குள் மிகப் பெரியளவு வளர்ச்சியைக்கண்டுள்ளது. துப்பாக்கிகளுக்கு மேல் பீரங்கிகள் வந்தால் என்ன செய்வீர்கள் என்று கேட்கும் தலைவர்கள் வழி நடாத்திய காலத்தில் இருந்து 'பீரங்கிகள்எடுத்துவருவோம் வாருங்கள்'' என்று எம்மை அழைத்துச் செல்லும் தலைவன் வழிகாட்டும் காலத்தில் இன்று நாம் நிற்கின்றோம். அந்தப் பரிணாம வளர்ச்சி எமது இனத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சியாக அமையும் நேரத்தில் நாம் வெல்லும் பகுதிகள் எமது மக்கள் வாழும் பகுதிகளாக மாறும் அந்த நாள் விரைவில் வர நீங்கள் எல்லோரும் புலிக

டத்தில் அன்னிய சக்திகள் தலையிடுவதைத் தவிர்த்துக் கொண்டுவிட்டது என்று தெரிவித்தார். அவர் தொடர்ந்து பேசும்போது, பூநகரியில் கூட்டுப்படைத் தளத்தை தகர்த்தெறிந்ததன் மூலம் தமிழீழத்தில் உள்ள ஏனைய தளங்களையும் அழித்துவிடக்கூடிய அளவுக்கு நாம் அறிவு, அனுபவம் ஆகியவற்றைப்பெற்றுக் கொண்டுவிட்டோம். அத்துடன் புதிய நம்பிக்கையையும் பெற்றுக்கொண்டு விட்டோம் இத்தனைக்கும் மேலாக தமிழீழத்தில் இன்று ஓர் உன்னதமான தியாகங்கள் நிறைந்த ஒரு விடுதலைப் போராட்டம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்பதை நாம் உலகுக்கு உணர்த்தியுள்ளோம் என்றார்.

இக்கூட்டத்தில் கலந்து கொண்ட யாழ். மாவட்ட மகளிர் அமைப்புப் பொறுப்பாளர் செல்வி தணிகைச் செல்வி பேசும்போது, இன்று சர்வதேசமும், எமது எதிரியும் எமது போராட்டத்தை வியந்து பேசுமளவுக்கு எமது போராட்டம் வளர்ந்து விட்டது. இதற்குக் காரணம் எமது தலைமையின் தீர்க்கதரிசனம் மிக்க வழிகாட்டலே ஆகும்.

இப்போராட்டம் எமது தலைமுறைக்கான போராட்டம். காலம்இட்டகட்டளைக்கமைய நாம் அனைவரும் போராடியே ஆகவேண்டும். எமக்காகப் போராடுவதற்கு படைபலத்தை வெளியில் இருந்து இறக்குமதி செய்ய முடியாது என்றும் அவர் தெரிவித்தார்.

---

ளின் பின்னே அணிதிரள வேண்டும்.

''எமது போராட்டத்தை நடாத்துவது அல்ல, தமிழீழத்தைப் பெறுவதுதான் எமது நோக்கம். எமது இனத்துக்கு தமிழீழம் கிடைக்கவேண்டும் தமிழீழத்துக்காக நாம் போராடுவோம்'' இது பூநகரித் தாக்குதலிற்கான தயாரிப்பு வேலைகள் நடந்து கொண்டிருக்கும் சமயம் தலைவர் பிரபாகரன் கூறிய கூற்று ஆகும்.

நாம் தமிழீழத்தைப் பெற வேண்டுமாக இருந்தால் பூநகரித் தாக்குதலில் எமது வீரர்கள் காட்டிய வீரம் எமது இனத்தின் ஒட்டுமொத்த வீரமாக மாற வேண்டும். எமது இனம் ஒரு வீரப் பண்பு மிக்க இனமாக அமைந்தால் தான் நாம் தமிழீழம் அமைப்போம் தமிழீழம் அமையும் போது அங்கு நாம் உறுதியுடன் நிற்கமுடியும். இவ்வாறான வீரப்பண்பு மிக்க இனத்தைக் கட்டி எழுப்பும் எமது தலைவர் அவர்களின் இலட்சியத்தை அவர் நிறைவேற்ற நாம் எல்லோரும் எமது மக்கள் எல்லோரும் அந்த இலட்சியத்தின் பின்னே அணிதிரள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன் என்றும் திரு. பொட்டு அம்மான் தெரிவித்தார்.

மக்கள் ஆகியோர் நீண்ட வரிசையில் நின்று அஞ்சலி செலுத்தினர். இந்நிகழ்வைத் தொடர்ந்து மாலை 5-00 மணியளவில் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

தீவகக் கோட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. செம்மணன் தலைமையில் நடைபெற்ற இப் பொதுக் கூட்டத்தில் தலைமை உரையைத் தொடர்ந்து யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி, யாழ். மாவட்ட சிறப்புத்தளபதி திரு. செல்வராசா, யாழ். மாவட்ட மகளிர் அமைப்புப் பொறுப்பாளர் தணிகைச் செல்வி, மகளிர் படையணியைச் சேர்ந்த செல்வி ராதா மற்றும் விடுதலைப்புலிகளின் மூத்த உறுப்பினர் திரு. பொட்டுஅம்மான் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

இறுதியில் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

---

## வடமராட்சி

கூட்டுத்தளத்தில் புலிகளால் கைப்பற்றப்பட்ட டாங்கி, நீருந்து விசைப்படகு ஆகியவற்றின் மாதிரி உருவங்களைச்சித்தரிக்கும் பிரமாண்டமான ஊர்தி ஒன்று இன்று வடமராட்சியின் கேந்திர நிலையங்களூடாக பவனி வரும்,

---

## மாவீரர்களின்

புத்தபிக்குகளுடன் சேர்ந்து ஜே. ஆர் ஜெயவர்த்தனா தடைசெய்வது, தரப்படுத்தல் மூலம் சிறிமாவோ தமிழ் மாணவர்களின் கல்விக்கு வைத்த வேட்டு, உலகத் தமிழாராய்ச்சிமாநாடுயாழ்ப்பாணத்தில் நடைபெற்ற போது சிங்கள அரசு நடாத்திய அடாவடித்தனம், திருநெல்வேலியில் தமிழீழ விடுதலைப் புலிகள் இராணுவம் மீது மேற்கொண்ட தாக்குதல், மில்லரின் கரும்புலித் தாக்குதல், இந்திய இராணுவம் கபடமாக உணவுப் பொட்டலங்கள் விமானம் மூலம் விநியோகித்தது, கடற்புலிகளின் தாக்குதல் மூலம் சிங்களப்படகுகள் சிதறியது. பூநகரி முகாம் மீது தமிழீழ விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதல் இதன் மூலம் மக்கள் எழுச்சியடைந்து புலிகளின் பின்னால் அணிதிரள்வது ஆகியவற்றை சித்தரிக்கும் காட்சிப்படங்கள் வைக்கப்பட்டிருந்தன. (17)

---

## வெற்றிச்

அடைந்து அங்கிருந்து பலாலி வீதியூடாக யாழ். பல்கலைக் கழக மைதானத்தை வந்தடைந்ததும் அங்கு மைதானத்தின்நடுவே அமைக்கப்பட்டிருந்தவெற்றிச்சுடரை ஏற்றினர்

குழுமி நின்ற மக்கள் தமது வலக்கரங்களை உயர்த்தி 'வெற்றி, வெற்றி'' என முழக்கமிட வெற்றி கீதம் இசைக்க வெற்றிச்சுடர்ஏற்றி வைக்கப்பட்டது.

## 31-ம் நாள் நினைவஞ்சலி



தாயின் மடியில்: 09 – 01 – 1976

தாயக மீட்பில்: 11 – 11 – 1993

### லெப். மைனா
### (செல்லையா வசந்தி)

பூநகரி முகாம் தகர்ப்பில் வீரச்சாவு அடைந்த இவருடைய ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

இவருடன் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட அனைவரையும் நினைவு கூருகின்றோம்.

கிரிகைகள் இவரது இல்லத்தில் இன்று 13-12-93இல் நடைபெறும் சகலரையும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு. (6874)

குடும்பத்தினர் இ. செல்லையா

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில்: **22-04-1969**

தாயக மண்ணில்: **24-11-1992**

### வீரவேங்கை குலேந்தினி
### (சறோஜினி முத்துராஜா)

திதி: 13. 12. 1993

தமிழ்த்தாய் பெற்றெடுத்த தமிழ் புதல்வி இவள்
வளலாய் மண்ணதில் வளலாய் வந்துதித்த சிங்களப்
படையுடன் நேரடி மோதலில் காவியமாகிய
குலேந்தினி ஓராண்டாய் மலர்கிறது
இம்மலர்வில் உம்மோடு
காவியமான சக மாவீரர்களின்
நினைவை நெஞ்சோடு சுமக்கின்றோம்.

எமது இல்லத்தில் நடைபெறும் இந்நிகழ்வில் உறவினர் நண்பர்கள், போராளிகள் ...

# பெண்போராளிகள் ஆண்போராளிகள் கூட்டாக நடத்திய பெரும்சமர்

## வெற்றி விழாவில் ராதா

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் பூநகரிச் சமர் ஒருவரலாற்றுத் திருப்புமுனையை ஏற்படுத்திவிட்டது இந்தச் சமரில இதுவரை என்றுமே நிகழாத வகையில் பெருந்தொகையான அரச படைகள் அழிக்கப்பட்டிருக்கின்றன. பல இராணுவத் தளங்களையும் கடற்படைத் துறைகளையும் கொண்ட ஒரு பெரிய கூட்டுப்படைத்தளம் புலிப்படையால் அழிக்கப்பட்டிருக்கிறது. பெண் போராளிகளும் ஆண் போராளிகளும் கூட்டாகச் சேர்ந்து நடாத்திய மிகப்பெரிய சமர் இது. இந்தப்போர் நிகழ்வை திட்டமிட்டுச் செயற்படுத்திய பெருமை எமது தலைவரைச் சாரும்.

பூநகரிச் சமரில் பெண் போராளிகளின்பங்கு ஒரு முக்கிய இடத்தை வகிக்கிறது. பெரும் எண்ணிக்கையில ன பெண் புலிகள் இந்தத் தாக்குதலில் பங்குகொண்டனர்: இவ்வாறு நேற்று பல்கலைக் கழக மைதானத்தில் நடைபெற்ற பூநகரிமுகாம் தகர்ப்பு வெற்றி விழாவில் மகளிர் படையணியின் மூத்த உறுப்பினர் ராதா தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்; பூநகரிச் சமர் நீண்ட காலமாகவே திட்டமிடப்பட்ட ஒரு சமர் நீண்ட காலமாகவே இதற்கான பயிற்சிகள் நடைபெற்றன. இந்தப் பயிற்சிகள் மிகவும் கடினமானவை, பூநகரிச் சமரிலே நாம் வெற்றி பெறுவதற்காக எத்தனையோ துன்பங்களை எதிர்கொள்ள வேண்டி வந்தது. மிகக் கடுமையான பயிற்சி. மழை காலமாதலால் நிலம் எல்லாம் சேறு. மழையில் நனைந்தவாறு ஈர உடைகளுடன் இடைவிடாத பயிற்சி. மழையாலும் குளிராலும் வந்த வருத்தங்களைக் கூட யாரும் பொருட்படுத்தவில்லை. பூநகரித் தளத்தை அழிக்கவேண்டும் என்ற எண்ணமே எல்லோர் மனங்களிலும் எழுந்து நின்றதால் எந்தத் தடைகளுமே யாரையுமே பாதிக்கவில்லை.

இந்தத் தாக்குதலின்போது மகளிர் படையணிக்கு ஒரு குறிப்பிட்ட பகுதியிலுள்ள காவலரண்களைத் தாக்கியழிக்கும் பொறுப்பு கொடுக்கப்பட்டது. நீண்ட நிலப்பரப்பைக் கொண்ட பிரதேசத்தில் பெருந்தொகையான காவலரண்கள் அமைந்திருந்தன. இராணுவத்தினரின் பலமான எதிர்த் தாக்குதலுக்கு மத்தியிலே நாம் அந்தககாவலரண்களைத் தாக்கி, கைப்பற்றி, அழித்தோம்.

இந்தத் தாக்குதலில் விடுதலைப்புலிகள் மகளிர் படையணியின் சகல பிரிவுகளும் பங்குகொண்டன. முன்னெப்போதுமில்லாதவகையில் தனித்துவமான சில பொறுப்புக்களை ஏற்றுக்கொண்டன இப்போரின் ஆரம்பகட்ட நடவடிக்கைகளிலிருந்து இறுதி நடவடிக்கை வரையில் முழுமையாக பங்காற்றின.

பூநகரிச் சமரிலே பெண் புலிகளின் மனோதிடம், உறுதி என்பன வெளிப்பட்டன. அவர்களின் வீரத்தை எடுத்துக்காட்டும் சாதனைகள் நிகழ்த்தப்பட்டன உதாரணத்துக்கு ஒரு சம்பவத்தைச் சொல்கிறேன்.

லெப். கேணல் பாமா போருக்குப் புறப்பட்டுப் போகும் போது இந்தச் சண்டையிலே தான் ஒரு நீருந்து விசைப் படகைக் கைப்பற்றுவதாகச் சொல்லிவிட்டுப் போனார். சொன்னது போலவே ஒரு படகைக் கைப்பற்றினார். பெண் புலிகளின் போராற்றலுக்கு இது ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

விடுதலைப் புலிகள் மகளிர் படையணியினர் இப்போதெல்லாம் பெரும் தாக்குதல்களில் பங்கு வகித்துவருகின்றனர். பெரிய பரிமாணம் கொண்ட தாக்குதல்களில் பங்கேற்று பெரும் சாதனைகளைப் புரியுமளவுக்கு வளர்ச்சி கண்டு வருகின்றனர். ஒவ்வொரு சமரும் அவர்களுக்குப் புதிய அனுபவங்களையும் புதிய நம்பிக்கைகளையும் ஏற்படுத்தி வருகின்றது.

இந்தப் போரிலே ஆயுதங்களைக் கைப்பற்றுவதற்கு புலிகள் எப்படித் திரண்டார்களோ, அதுபோல அந்த ஆயுதங்களை ஏந்துவதற்கும் ஆயிரமாயிரம் யுவதிகளும், இளைஞர்களும் எம் பின்னால் அணிதிரள வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

# விடுதலைப் புலிகளுக்கு ஆசிவேண்டி இந்து குருமார்கள் மகா வேள்வி

பூநகரி கூட்டுத்தள தகர்ப்பு வெற்றியை வாழ்த்தியும் விடுதலைப் புலிகளுககு ஆசி வழங்கியும், தமிழீழத் தேசியத் தலைவர் திரு வே. பிரபாகரன் இன்னும் பல வெற்றிகள் குவிக்கப் பிரார்த்தித்தும் நேற்று நல்லூர் சிவன் தேவஸ்தானத்தில் இந்து மத குருமார் ஒன்றியத்தினால் மாபெரும் வேள்வி நடாத்தப்பட்டது தமிழீழத்தின் ஐம்பதுக்கு மேற்பட்ட குருமார் கலந்து கொண்டு வேதம் சொல்லி பிரமாண்டமான ஓமகுண்டத்தில் தீ வளர்த்து இவ் வேள்வியை நடா... ளின் குருமார்களும், சிரோமணிகளும் கலந்து கொண்டனர். இந்த யாகத்தில் இந்து மத குருமார் ஒன்றிய குருகுல மாணவர்கள், சிவானந்த குருகுல மாணவர்கள், தர்மசாஸ்தா குருகுல மாணவர்கள் மற்றும் ஸ்ரீதேவி குருகுல மாணவர்கள் ஆகியோர் வேதபாராயணம் செய்தனர். இந்த வேள்வி சுமார் 4 மணி நேரம் தொடர்ந்து நடைபெற்றது இறுதியில் தமிழீழத்துக்கன ஆசீர்வாதத்துடன் வேள்வி நிறைவெய்தியது.

# ராமராவின் ராஜினாமா ஏற்கப்படவில்லை

(டில்லி)

தேசியமுன்னணியின் தலைவர் ... துணைத் தலைவர் சிறீகாந்த் ஜனா இதுபற்றி மேலும் கூறு...

# சிதைந்த யாகப்பர் ஆலயம் நத்தார் வாழ்த்து மடல்

## இன்று வெளியிடப்படுகிறது

கடந்த மாதம் 13ஆம்திகதி சிறிலங்கா வான் படையைச் சேர்ந்த ''சுப்பர் சொனிக்'' விமானக்குண்டு வீச்சால் சேதமடைந்துள்ள குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தின் சிதைந்த தோற்றத்தைப் பொறித்துள்ள நத்தார் வாழ்த்துமடல்கள் இன்று வெளிவர இருப்பதாக யாகப்பர் ஆலய பங்குத் தந்தை வண. ஆர். எம். ஜி. நேசநாயகம் அடிகள் தெரிவித்தார். (21)

# முகாமைப் பாதுகாப்பதில் மிகுந்த அவதானம் தேவை

## சிசில் தெரிவிப்பு

(கொழும்பு)

''எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படக்கூடிய இராணுவ நடவடிக்கையின் போதாயினும்சரி, அல்லது முகாம்களை அமைத்துப் பாதுகாப்பதிலும்சரி மிகுந்த அவதானமாக இருக்கவேண்டும் என்பதையே கிளாலி, பூநகரி சம்பவங்கள் எமக்கு உணர்த்தியுள்ளன.'' என இராணுவத் தளபதி சிசில் வைத்தியரெட்னா 'திவயின' பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகள் தொடர்ச்சியாக பூநகரி முகாம்மீது பலமுறை தாக்குதல் நடாத்தியே வந்தனர். அத்துடன் பாரிய தாக்குதல் ஒன்று நடைபெறும் என்ற தகவல் சில வாரங்களுக்கு முன்னரே தெரியவந்தது அதனால் முகாமிற்கு கூடுதல் பாதுகாப்பும் போடப்பட்டது. ஆனால் இராணுவத்தினர் சற்றும் எதிர்பார்க்காத முறையில் அதிகளவு புலிகள் முகாமைத் தாக்கத்தொடங்கினர்.

இவ்வளவு அதிகளவில் 4000-5000 புலிகள் இதுவரை இலலாதவாறு தாக்குதல் நடாத்தியதால் இராணுவத்தினர் பின்வாங்கவேண்டி ஏற்பட்டது என மேலும் அவர் தெரிவித்தார்.

# எல்லை முகாம்களிலிருந்து டாங்கிகள் அகல்கின்றன

விடுதலைப் புலிகள் முகாம்களைத் தாக்கலாம் என்ற அச்சத்தால் இராணுவத்தினர் எல்லைப்புற முகாம்களைப் பலப்படுத்தும் முயற்சியிலும், தற்காப்பு நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ளனர்.

செட்டிகுளம், பம்பைமடு, நெச்சிமோட்டை, மகாபச்சைக்கொடி ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ள சிறிய முகாம்களிலிருந்து தாங்கிகள் மற்றும் கனரக ஆயுதங்களை வவுனியா தலைமைப் படைத் தளத்துக்கு எடுத்துச் செல்லும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

பூநகரியில் நடந்ததுபோல் இங்கும்நடைபெறாதிருக்கவே இந்த நடவடிக்கை என்று இராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# வெருகலில் புலிகள் தாக்கு ராணுவச்சிப்பாய் பலி

(கொழும்பு)

மட்டக்களப்பு வெருகல் பகுதியிலுள்ள இராணுவ காவலரண் ஒன்றின் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடாத்தியுள்ளனர் இத் தாக்குதலின் போது ஒரு இராணுவ சிப்பாய் பலியாகியதாகவும் மற்றும் சிலர் காயமடைந்ததாகவும் கொழும்பில் இராணுவத் தலைமையகம் அறிவித்தது.

# மழைக்காலம் முடிந்ததும் வடக்கில் தாக்குதல்நடக்கும்

வடபகுதியில் ஜனவரி மாதத்தில் பருவ மழைக்காலம் ... வது இப்பகுதி மக்களுக்கான ஆபத்தான காலம் என்றாகி...



## வீரவேங்கை குலேந்தினி

**(சறோஜினி முத்துராஜா)**

**திதி: 13. 12. 1993**

தமிழ்த்தாய் பெற்றெடுத்த தமிழ் புதல்வி இவள்
வளலாய் மண்ணதில் வளலாய் வந்துதித்த சிங்களப்
படையுடன் நேரடி மோதலில் காவியமாகிய
குலேந்தினி ஓராண்டாய் மலர்கிறது
இம்மலர்வில் உம்மோடு
காவியமான சக மாவீரர்களின்
நினைவை நெஞ்சோடு சுமக்கின்றோம்.

எமது இல்லத்தில் நடைபெறும் இந்நிகழ்வில் உறவினர் நண்பர்கள், போராளிகள் அனைவரையும் கலந்து கொள்ளும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

பிரியதர்சன் வீதி,
புத்தூர் கிழக்கு,
புத்தூர்:

இங்ஙனம்
குடும்பத்தினர்

(6876)

# விடுதலைப் புலிகளுக்கு ஆசிவேண்டி இந்து குருமார்கள் மகா வேள்வி

பூநகரி கூட்டுத்தள தகர்ப்பு வெற்றியை வாழ்த்தியும் விடுதலைப் புலிகளுக்கு ஆசி வழங்கியும், தமிழீழத் தேசியத் தலைவர் திரு வே. பிரபாகரன் இன்னும் பல வெற்றிகள் குவிக்கப் பிரார்த்தித்தும் நேற்று நல்லூர் சிவன் தேவஸ்தானத்தில் இந்து மத குருமார் ஒன்றியத்தினால் மாபெரும் வேள்வி நடாத்தப்பட்டது தமிழீழத்தின் ஐம்பதுக்கு மேற்பட்ட குருமார் கலந்து கொண்டு வேதம் சொல்லி பிரமாண்டமான ஓமகுண்டத்தில் தீ வளர்த்து இவ் வேள்வியை நடாத்தினார்கள். சிவஸ்ரீ ஸ்கந்த சாம்பசிவக் குருக்கள் தலைமையில் நடைபெற்ற இவ் வேள்வியில் மக்களும், விடுதலைப் புலிப் போராளிகளும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். யாழ்ப்பாணத்து அனைத்து தேவஸ்தானங்களின் குருமார்களும், சிரோமணிகளும் கலந்து கொண்டனர். இந்த யாகத்தில் இந்து மத குருமார் ஒன்றிய குருகுல மாணவர்கள், சிவானந்த குருகுல மாணவர்கள், தர்மசாஸ்தா குருகுல மாணவர்கள் மற்றும் ஸ்ரீதேவி குருகுல மாணவர்கள் ஆகியோர் வேதபாராயணம் செய்தனர். இந்த வேள்வி சுமார் 4 மணி நேரம் தொடர்ந்து நடைபெற்றது இறுதியில் தமிழீழத்துக்கன ஆசீர்வாதத்துடன் வேள்வி நிறைவெய்தியது.

## ராமராவின் ராஜினாமா ஏற்கப்படவில்லை

(டில்லி)

தேசியமுன்னணியின் தலைவர் பதவியில் இருந்து தெலுங்கு தேசக் கட்சியின் தலைவரும், முன்னாள் ஆந்திர முதல்வரான என். டி. ராமராவ் இராஜினாமா செய்திருப்பது ஏற்றுக்கொள்ளப்படவில்லைஎன்று ஜனதா தள் கட்சி கூறியுள்ளது.

இந்திய நாடாளுமன்றத்திலுள்ள ஜனதா தள கட்சியின் துணைத் தலைவர் சிறீகாந்த் ஜனா இதுபற்றி மேலும் கூறுகையில், அண்மைய சட்டப் பேரவைத்தேர்தல்களில் கட்சி தோற்றுப் போனமைக்கு ராமராவ் எவ்வகையிலும் பொறுப்பு அல்ல. அதனால் அவரது இராஜினாமா தேவையற்றது எனறு ஜனதா தள் தலைவர் வி. பி. சிங் அறிவுறுத்தி இருப்பதாகவும் தெரிவித்தார்.

கைகளிலும் ஈடுபட்டுள்ளனர்.

செட்டிகுளம், பம்பைமடு, நெச்சிமோட்டை, மகாபச்சைக்கொடி ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ள ... ஈடுபட்டுள்ளனர்.

பூநகரியில் நடந்ததுபோல் இங்கும்நடைபெறாதிருக்கவே இந்த நடவடிக்கை என்று இராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## வெருகலில் புலிகள் தாக்கு ராணுவச்சிப்பாய் பலி

(கொழும்பு)

மட்டக்களப்பு வெருகல் பகுதியிலுள்ள இராணுவ காவலரண் ஒன்றின் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடாத்தியுள்ளனர் இத் தாக்குதலின் போது ஒரு இராணுவ சிப்பாய் பலியாகியதாகவும் மற்றும் சிலர் காயமடைந்ததாகவும் கொழும்பில் இராணுவத் தலைமையகம் அறிவித்தது.

## மழைக்காலம் முடிந்ததும் வடக்கில் தாக்குதல்நடக்கும்

வடபகுதியில் ஜனவரி மாதத்தில் பருவ மழைக்காலம் முடிவடைந்ததும் அரச படைகள் தாக்குதல் நடத்துவர் என தெற்கில் இராணுவ நிபுணர்கள் நம்புவதாக பி பி.ஸி தெரிவித்தது. புலிகள் இராணுவத்தின் தாக்குதலுக்கு தாம் தயார் என்பதை காட்டியிருக்கின்றனர்.

மழைக்காலம் முடிவடைவது இப்பகுதி மக்களுக்கான ஆபத்தான காலம் என்றாகிவிட்டது எனவும் பி பி. ஸி குறிப்பிட்டது. பூநகரி தாக்குதலை தொடர்ந்து சிறிலங்கா விமானப்படை பழிவாங்கும் முகமாக குடாநாட்டில் பரவலாக கண்மூடித்தனமான தாக்குதலை நடத்துவது குறித்தும்பி. பி. ஸி குறிப்பிட்டது.

வாசகர்களே,

வடமாகாண

**பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் வெளியீடான**

## "கற்பகம்"

**மீளவும் இவ்வாரம் முதல் வெளிவருகிறது**

கற்பகம் பத்திரிகையால் ஒவ்வொருவரும் பயன் பெறுவதுடன் பத்திரிகைக்கான ஆக்கங்களையும் உங்களிடம் இருந்து எதிர்பார்க்கின்றோம்.

நன்றி

499, கே. கே. எஸ். வீதி
யாழ்ப்பாணம்.

பொதுமுகாமையாளர்,
வடமாகாண
ப. தெ. வ. அ. கூ. சங்கங்களின்
சமாசம்

(சி-8110)

## 1-வது பிறந்தநாள் வாழ்த்து

**13. 12. 93**



**செல்வன் அருளானந்தம் அகிலன்**

துணவி சங்கரத்தையில் வசிக்கும் அருளானந்தம் விஜயராணி தம்பதிகளின் செல்வப்புதல்வன் அகிலன் தனது முதலாவது பிறந்தினத்தை 13-12-93 இன்று தனது இல்லத்தில் வெகு சிறப்பாக கொண்டாடுகிறார். இவரை அன்பு அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, பெரியப்பா, அன்ரிமார், மாமாமார், குஞ்சு சித்தப்பா, கட்டாரில் இருக்கும் லிங்கச்சித்தப்பா, லண்டனில் வசிக்கும் மாமி, மாமா, மச்சாள் ஜெனனி மற்றும் தர்சிகா, தயானி மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் நல்லைக் கந்தன் அருள்பெற்று பல்கலையும் கற்று பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

(6862)

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

**12 - 12 - 93**

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 11690

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்

24-4265, 24-7623, 24-6161, 42-0970, 24-3897
26-9626, 42-1320, 26-2108, 24-4468, 26-7282
27-2002, 26-1169, 27-9492, 41-8167, 26-5846
22-6468, 42-3574, 26-6062, 26-4874.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்

42-1293, 24-7087, 27-5912, 43-0517, 27-1375
27-7740, 24-0878, 26-5962, 27-0991, 24-9938
27 1380, 27-6821, 27-8815, 24-8815, 24-1040
40-6979, 40-7299, 22-3887, 42-0962, 24-5119
27-6583, 22-7862, 28-4255, 42-0526, 24-9645

## கணக்காளர் தேவை

நிறுவனமொன்றின் சகலவிதமான கணக்குகளையும் பேணக்கூடிய அனுபவமிக்க கணக்காளர் ஒருவர் தேவை. ஓய்வு பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம்.

**விண்ணப்ப முடிவு திகதி: 21-12 1993**

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :-

**மே/பா ஈழநாதம்,**
**விளம்பர இல. 301**
**இல. 31 மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம்.**

(சி 8117)

## மரண அறிவித்தல்

### திருமதி இராசேந்திரம் நாகரத்தினம்

இளவாலை முள்ளானையைச் சேர்ந்த இராசேந்திரம் நாகரத்தினம் காலமாகிவிட்டார். இவர் காலம்சென்ற இராசேந்திரத்தின் மனைவியும் இராசகுமாரி, கதிர்காமசிங்கம் திருக்கருணை, நவரட்ணசிங்கம், சாந்தகுமாரியின் தாயாருமாவார். இவரது ஈமக்கிரியைகள் இன்று மாலை 3 மணிக்கு மானிப்பாயில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர் யாவருக்கும் அறியத்தருகிறோம்.

4-ம் கட்டை,
ஆனைக்கோட்டை.

தகவல்:
மருமகன்,
ராஜ்

(6881)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1993ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 13ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.